Registered No. M-4433 Madras War Review (TAMIL) 4-8-1944

யுத்த சஞ்சிகை

மலர் IV 1944-ம் ௵ ஆகஸ்ட்டு ௴ 4௳, வெள்ளிக்கிழமை இதழ் 48

உலகத்திலேயே, தானாகச் சேர்ந்த மகா பெரும் படை

மிஸ்டர் எல். எஸ். எமரி.

இந்தியாவின் பலவகை வாழ்க்கைகளிலு மீடுபட்டிருப்பவர்கள் எல்லாம் அரசியல் தலைவர்களாகவோ, அல்லது அவர்களைப் பின் பற்றுகிறவர்களாகவோ இல்லை.

படையினரும் இந்தியர்கள் தான். அவர்களுடைய பரம்பரை வீரமும் இராஜ விசுவாசமும் அவர்களிடம் துலங்குகின்றன. 2 லட்சம் பேர்களை முதலில் கொண்டிருந்த இந்தியப் படை, இப்போது 20 லட்சமாகப் பெருகி விட்டது. இவ்வளவு பெரிய படை தானாகவே உலகத்தில் ஒரு போதும் திரண்டதில்லை.

மத்தியக் கிழக்கு நாடுகளையும் நேச நாடுகளின் நலங்களையும் காப்பாற்றும் பொருட்டு மிகப் பெரும் படையை எதிர்த்து முதன் முதலாகப் போராடிய போது, இந்தியப் படையினருக்கும் இந்திய உத்தியோகஸ்தர்களுக்கும், தான் பெரிதும் கடமைப் பட்டிருப்பதாக, வேவல் பிரபு கூறி யிருப்பதை விட, வேறு அத்தாட்சி தேவையில்லை.

அபிசீனியாவிலுள்ள மலைகளிலிருந்து அப்பினைன் மலை வரையிலும், டமாஸ்கஸிலிருந்து ஆர்மோ வரையிலும் இந்தியப் படைகள் வெற்றிகள் பெற்றன. இந்தியப் படைகளுடைய திறமையை, அவர்களோடு சேர்ந்து போராடியவர்களும் எதிர்த்துப் போராடியவர்களும் ஒப்புக்கொள்ளுகின்றனர். நேச நாட்டினரின் பொருட்டு ஈராக்கையும் பராசீகத்தையும் முழுவதும் இந்தியப் படைகள் காப்பாற்றிக் கொண்டிருந்தன. மலேயேவிலும் பர்மாவிலும் துரதிர்ஷ்ட வசமாகப் பின் வாங்க வேண்டிய தொல்லை அவர்களுக்கு ஏற்பட்டது. இன்று பர்மா போர் முனையில் ஜப்பானியர்களைத் தக்கபடி பழி வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

மிஸ்டர் எல். எஸ். எமரி, இந்தியா மந்திரி, ஜூலை 28-ம் தேதி காமன்ஸ் சபையில் கூறியது.

பொருளடக்கம்.

	பக்கம்.		பக்கம்.
படம்: மிஸ்டர் எல். எஸ். எமரி	1	ஒரு பிடி அரிசி உலகைக் காக்கும்	5
உலகத்திலேயே, தானுகச் சேர்ந்த மகா பெரும் படை	1	அபாய அறிவிப்பு	7
சிறு கதை: படையில் சேருவதனுல் நலனுண்டு ..	2	ஹிட்லரின் கதி	9
தலையங்கம்: மறையும் ஜப்பான்	3	உண்மைத் தமிழ் மகள் தங்கம்	10
போர் முனை நிகழ்ச்சி விளக்கம்	4	படங்கள்: இத்தாலியப் போர் முனையில் ..	11
		யுத்த நாட் குறிப்புக்கள்	12

படையில் சேருவதனுல் நலனுண்டு

சிறு கதை

[இந்திய ஏழைக் குடும்பங்களில் ஒன்று வறுமையால் தத்தளித்தல். கணவன் ராஜ பக்தி மேலிட்டு, இந்தியப் பட்டாளத்தில் போர் வீரன் ஆகி யுத்தசேவை செய்கிறுன். இதனுல் குடும்பத்தில் நலம் பலவும் நிறைகிறது. அடியில் வரும் சம்பாஷணை இதனைச் சித்தரிக்கிறது.]

(தாய்க்கும் மகனுக்கும் நடந்த சம்பாஷணை.)

[டோமாப் பாட்டிசை]

தாய் பாட்டு

மகனே நீ படிப்பதற்கு வசதி யெல்லாம் வந்ததினுல்
சுகமாகப் பள்ளிக்கூடம் தோழருடன் சென்றிடுவாய்
நேர்த்தி — இனித்
துன்பமில்லை இன்பமுண்டு பூர்த்தி. (மக)

தாய் வசனம்

குழந்தாய்! தந்தை மக்களுக்குத் தேடி வைக்கவேண்டிய பொருள் கல்வி. உனக்குச் சகல வசதிகளும் கிடைத்திருக்கின்றன. இன்று முதல் பள்ளிக்கூடம் சென்று வா.

மகன் பாட்டு

அம்மாயீ தென்னவிந்தை யாகவல்லோ தோன்றுது? முன்
சும்மா இருந்தவர்க்கு சுகம் வந்தது எப்படிச்சொல்
வாயே — இதன்
சூட்சமமதைக் கூறவேண்டும் தாயே. (அம்)

மகன் வசனம்

அம்மா! பள்ளிக்கூடம் செல்ல வேண்டும். படிக்க வேண்டும் என்று, நான் அழுதழுது சொன்னதுண்டு. சோற்றுக் கவலை, துணிமணிக் கவலை, மனக்கவலை, குடும்பக் கவலை என்ருய். அப்படிச் சொன்ன நீ என்னைப் பள்ளிக்கூடம் போகச் சொல்லுகிருய். குடும்பக் கவலை தீர்ந்தது என்கிருய். அது எப்படியம்மா? எனக்குச் சொல்ல மாட்டாயா?

தாய் பாட்டு

அன்பே! உனதுதந்தை அரசர்பட்டா ளந்தனிலே
நன்ருகச் சேவைசெய்யும் நன்றியது கண்டுசர்க்கார்
தானே — கல்வி
நலந்தனை யுண்டாக்கினர் சொன் னேனே. (அன்)

தாய் வசனம்

கண்ணே! இப்பொழுது உலக யுத்தம் நடக்கிறதல்லவா? அதில் உனது தந்தை இந்தியப் பட்டாளத்தில் போர் வீராகி உழைக்கிருர். இராணுவத்தில் சேர்ந்து பாடுபடுகிற குடும்பங்களுக்குச் சர்க்கார் இலவசக் கல்வி அளிக்கிருர்கள். அதில் நமது குடும்பமும் ஒன்று. புத்தகங்கள், சிலேட்டு முதலியன தருமமாகக் கிடைக்கும். சம்பளமும் கிடையாது. இப்பொழுது தெரிந்ததா?

மகன் பாட்டு

அன்னைமுன் அழுதபொழு தரைக்கஞ்சியும் வார்க்கலையே
இந்நாள் திருப்தியுடன் இடுகின்ருயே உணவெனக்கு
ஏது? — இதன்
இரகசியமும் இயம்புவாயிப் போது. (அன்)

மகன் வசனம்

அம்மா! பசிக்குது. கண் சொருகுது. மயங்குகின்றேன் என்றழுதபோது, அரை வயிற்றுக் கஞ்சியும் வார்க்காத நீ, இப்பொழுது நல்ல சோறு போடுகிருயே! அது எப்படியம்மா! எனக்குச் சொல்லு.

தாய் பாட்டு

கூப்பன் அரிசியிப்போ குறைவில்லாமல் கிடைப்பதினுல்
சாப்பாட்டுக் கேதுகுறை? சம்பளமும் மாதமாதம்
பாரே — உன்றன்
தந்தையார் அனுப்பிவைக்கின் ருரே. (கூப்)

தாய் வசனம்

குழந்தாய்! முன்பு நாம் கஷ்டப்பட்டகாலமுண்டு. நம்மை மதித்தாரும் இல்லை. இப்பொழுது தவருது கூப்பன் அரிசி சர்க்கார் கொடுக்கிருர்கள். செலவுக்குப் பணமும் உன் தந்தை, ஒவ்வொரு மாதமும் அனுப்பி வருகிருர். இனி நமக்குக் கவலை இல்லை. வெற்றி நமக்கே.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV — 1944-ம் ௵ ஆகஸ்ட்டு ௴ 4௳, வெள்ளிக்கிழமை — இதழ் 48

மறையும் ஜப்பான்

ஐரோப்பாவில் நேச நாடுகளுக்கு வெற்றி மேல் வெற்றி. பால்டிக் பகுதியில் தமக்குக் கிடைத்த வெற்றிகளைப் பாராட்டி ரஷ்ய பீரங்கிகள் பல, ஏக காலத்தில் முழங்குகின்றன. வார்சாவைக் கைப்பற்றியவுடனே இன்னும் அநேக பீரங்கிகள் சேர்ந்து முழங்கக் கூடும். நார்மண்டியில் ஜெர்மன் படைகள் பல பேராபத்திற்குள்ளாகி யிருக்கின்றன. நமது தரைப் படைகளும் விமானப் படைகளும் இடைவிடாது கொஞ்சமும் தயவின்றித் தாக்கிக் கொண்டிருக்கின்றன. ஜெர்மனியை இடைவிடாது வெடிகுண்டுகளைக் கொண்டு தாக்குவதும் அதிகப்பட்டிருக்கிறது. ஆகவே ஐரோப்பாவின் நிலைமை கடைசியில் என்ன என்பதிலே உலக மக்களின் கவனம் பதிந்திருக்கிறது.

அன்றியும் பசிபிக் அரங்கத்திலும் நேசப் படைகளின் போராட்டமும் மிகவும் முக்கியமானது. ஜெர்மனியின் கழுத்துக்குச் சுருக்கிடப்பட்டிருப்பது போலவே, இங்கேயும் இடப்பட்டிருக்கிறது. இது பசிபிக் அரங்கத்தில் மட்டிலுமல்ல. பர்மா விஷயங்களின் போக்கும் கவனிக்கத் தக்கது தான்.

சைபானை இழந்தவுடனே ஜப்பானிய டோஜோ மந்திரி சபை ராஜிநாமா செய்தது மிகவும் பொருத்தந் தான். இந்த சைபான் தீவை இழந்ததுபற்றி ஜப்பானிய மக்களே கிடு கலங்கிப் போயிருக்கிறார்கள். இதற்குப் பிறகு, அமெரிக்கப் படைகள் மாரியானா தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த மற்றொரு முக்கியமான தீவாகிய குவாமையும் கைப்பற்றின. இதனால் ஜப்பான் மன்னரின் தளர்ந்த நரம்புகள் செயலற்றுப் போய்விடவும் கூடும்.

இந்த யுத்தத்தில் அநேகக் கப்பற் படைகள் பயனற்றுப் போயின. மத்தியதரைக் கடலிலிருந்த இத்தாலியக் கப்பற் படையைத் தேடிப் பிடித்து விட்டார்கள். ஜெர்மன் கப்பற் படை தண்ணீருக்குள்ளேயே நிரந்தரமா யிருக்கிற தென்று சொல்லலாம். இனி ஜப்பானியக் கடற்படையின் முறை. ஜப்பானியக் கப்பற் படை ஏன் வெளியேறி போர் தொடுக்கவில்லை யென்பதற்கு நாள் தோறும் ஏதேனும் புதுப் புதுக் காரணங்களைக் கண்டு பிடித்துக் கொண்டிருக்கிறார் அட்மிரல் டக்கா ஹாசி. ''பிறகு நிகழ்ந்தவை எதிர்பாராதபடி நிகழ்ந்ததனால், கப்பற் படை வெளிப்படை வில்லை'' யென்று ஒரு நாள் சொல்லுவார். மேலும் வற்புறுத்திக் கேட்டால், எதிரியைத் தகுந்தபடி குறிதவறாமல் தாக்கி வெல்ல வேண்டியிருக்கின்றபடியால், அதற்கான போர்த் தந்திர முறைகள் வகுக்கப்பட்டு வருகின்றன வென்று சொல்லுவார். உண்மையென்ன வென்றால், ஏராளமான விமானந் தாங்கிக் கப்பல்களையும் விமானங்களையும் ஜப்பான் இழந்து விட்டது. எதிர்த்துப் போர் தொடுக்கத் தக்க அளவு அவர்களிடம் சரக்கில்லை. நேசப் படைகளின் பலத்தை ஜப்பானியப் படைகள் கண்டு கொண்டன. ஆகவே தான் போராடுவதைத் தாமதித்துக் கொண்டிருக்கின்றனர்.

குவாம் தீவு மிகவும் முக்கியமானது. இதை யாரும் மறுக்க முடியாது. நியூகினிக்கும் ஜப்பானுக்கும் இடையே இது இருக்கிறது. இங்குள்ள விமானக் கூடத்தை அமெரிக்கர்கள் சுத்தப்படுத்தி விட்டார்கள். விரைவில் அதை விமானக் கூடமாக உபயோகிப்பார்கள். பசிபிக் சமுத்திரத்திலுள்ள இந்த முக்கியமான தீவகத்தைக் கொண்டு தாம் அடையக் கூடிய சாதகங்கள் அனைத்தையும் அவர்கள் கட்டாயம் அடைவார்கள். இதுவும் சைபானைப் போலவே மாரியானா தீவுக் கூட்டத்தைச் சேர்ந்தது தான். 1941-ம் வருஷம் டிசம்பர் மாதம் ஜப்பானியர்கள் சைபானைக் கைப்பற்றும் வரை, அத்தீவு அமெரிக்கர்களுக்குச் சொந்தமா யிருந்து, அங்கே ஒரு அழகிய இயற்கையான துறைமுக மிருக்கிறது. பிலிப்பைன் தீவைச் சேர்ந்த மணிலாவுக்கும் டோக்கியோவுக்கும் அருகில் இது இருப்பது தான், மிகவும் முக்கியம்.

தமக் கேற்பட்டிருக்கும் அபாயத்தைக் குறித்து ஜப்பானியர்கள் நன்கு உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். சமீபத்தில் டோக்கியோ ரேடியோவில் ஒருவர் கூறியதாவது :—

''சைபான் டோக்கியோவிலிருந்து 2,350 கிலோ மீட்டர் தூரத்திலும், பிலிப்பைனிலிருந்து 2,800 கிலோ மீட்டர் தூரத்திலும் இருக்கிறது. இந்தத் தீவு போராடுவதற்கு மிகவும் வசதியா யமைந்துள்ளது. ஆகவே, இனி பசிபிக் மகாசமுத்திரத்தில் போராடுவதற்கு உண்மையிலேயே இது பெரும் ஆபத்தாயிருக்கும். அதாவது இதனால் மகத்தான தீங்கு நேரும். ஆதலால், எதிரி சைபானிலிருந்து கோட்டை விமானங்களை டோக்கியோவுக்கு அனுப்பக்கூடும். ஏனென்றால், அந்த விமானங்கள் அவ்வளவு தூரம் பறக்கக் கூடியவை. அதாவது நமது கடற்கரையை அடுத்து போராட வேண்டிய பருவம் வந்து விட்டது என்று தான் இதற்கு அர்த்தம்.''

சைபான் தீவுதான் இப்படிப்பட்ட தென்றால், குவாம் தீவு இதைவிட முக்கியமானது. ஜப்பானியர்கள் அச்சத்திற்குத் தகுந்த காரணங்களிருக்கின்றன. மஞ்சூரியாவைச் சேர்ந்த முக்டெனைப் பட்டப்பகலில் 20-வது வெடிகுண்டுக் கோட்டை

விமானங்கள் சென்ற சனிக்கிழமை தாக்கின. அதன் பிறகு டெய்ன்ஸ்டெனேயும் தாக்கியதாக செய்தி நமக்குக் கிடைத்தது.

ஒரு விஷயம் மட்டும் உறுதி. இப்போதுள்ள நிலைமை ஜப்பானுக்குப் பிரதிகூலமானது. மந்திரி சபை மாறுதலைக் கொண்டு ஜப்பானியர்கள் எவ்வளவு தூரம் அச்சங்கொண்டிருக்கிறார்களென்று விளங்குகிறது. போரரங்கம் ஜப்பானை நெருங்கிவிட்டால் என்ன செய்வது என்பது பற்றி அவர்கள் தான் முடிவு கட்டவேண்டும்.

ஜப்பானில் மந்திரி சபையை அடியோடு மாற்றி யமைப்பதனால் உள் நாட்டில் வேற்றுமைக்கும், அதன் பயனாக மனக் கசப்புக்கும் இடமேற்படும். ஹிட்லர் நிலைமையும் அவருடைய படைத் தலைவர்களின் நிலைமையும் இதுவே தான். அவர்களுடைய மந்திரி சபைக ளெல்லாம் அழிந்து போகக் கூடிய ஆபத்தான நிலைமை குறையவோ, மாறவோ போகிறதில்லை.

இந்த பசிபிக் போர் முனையின் அடுத்த கட்டம் என்னவென்று மிகுந்த அக்கரையோடு சுயேச்சை யுலகம் கவனித்துக் கொண்டிருக்கும். எவ்வளவு சாந்தி யளிக்கத் தக்க முறையில் டோக்கியோ ஏகாதிபத்திய சர்வகலாசாலையைச் சேர்ந்த பேராசிரியரான டாக்டர் மஞ்சுனுமி பேசுகிறார் ! :—

"ஜப்பானியர் பின்பற்றுவதற்கு ஒரே வழி தான் உண்டு. மிகக் கடுமையான தோர் நிலைமை ஏற்படுமானால், உடல் பொருளாவி மூன்றையும் தம் சக்கரவர்த்தியின் பொருட்டுத் தத்தம் செய்து, கண்ணியமாக உயிர் விட வேண்டும்.''

இளஞ்சூரிய (ஜப்பான்) நாட்டின் தலை யெழுத்து முடிந்து விட்டதென்று ஜப்பானிய மக்களுக்கு நன்றாகத் தெரியும். கூடிய விரையில் அது அந்திச் சூரிய நாடாக மாறிவிடப் போகிறது. பர்மாவில் நடைபெறும் போராட்டம் நமக்கு மிகுந்த திருப்தி யளிக்கிறது. 130 மைல் நீளமுள்ள சில்சார் ரஸ்தாவினின்று ஜப்பானியர்களை அடியோடு விரட்டியாகிறது. மணிப்பூர் பகுதியினின்றே ஜப்பானியர்களை 14-வது இந்தியப் படை விரட்டி விட்டதென்று சொல்லலாம். மிட்கியானு நகரம் உண்மையிலேயே நம் வசந் தான் இருக்கிறது. இந் நகரத்தின் பொருட்டு கைகலந்த போராட்டம் நடை பெறுவதாக, சமீபத்தில் வந்த செய்திகளினின்று தெரிகிறது. 24 ஜப்பானிய சப்ளை கப்பல்களை பிரிட்டிஷ் நீர்மூழ்கிக் கப்பல்கள் பெரிதும் நாசப்படுத்தி யிருக்கின்றன. சுமாட்ராவிற்கு அருகிலிருந்த ஜப்பானிய டாங்கிகளை எல்லாம் வெடிகுண்டுகளால் தாக்கி நாசப்படுத்திவிட்டன. அந்தமான் தீவுகளிலுள்ள இராணுவக் கட்டடங்களை யெல்லாம் பிரிட்டிஷ் கப்பற்படை வெடிகுண்டுகளால் தரைமட்ட மாக்கிவிட்டன.

இனி ஜப்பானில் உதிக்கப்போவது ஒரு புதிய சூரியன். அதுதான் நேசநாடுகளின் வெற்றிச் சூரியன். இப்போது பசிபிக் தீவுகளுக்கு இடையேயுள்ள கடல்களெல்லாம் நேசநாட்டினரின் ஆதிக்கத்திற் குட்பட்டு விட்டன. ஆகவே, ஜப்பானியர் வயப்பட்டிருக்கும் நாடுகளிலுள்ள ஜப்பானியர்களுக்குப் பெரும் பீதி யுண்டாகி யிருக்கிறது. இதனால், ஜப்பானுக்குப் போக்குவரவு எதுவும் அவர்களுக்குச் சாத்தியமில்லாது போயிற்று. ஜப்பானிலேயே பெரும் பீதி தோன்றிவிட்டது. ஏனென்றால், இப்போதுள்ள நிலைமையில் ஜப்பானிய நகரங்கள் மீதே திடீரென்று வெடிகுண்டுகளைக் கொண்டு தாக்கக் கூடும். இந்தத் தற்கால விமானத் தாக்குதலைத் தாங்கக் கூடிய நிலைமையில் ஜப்பானிய நகரங்கள் இல்லை. வட பர்மாவில் பீதியும் குழப்பமும் மிகுந்துவிட்டது. எதிரி வயப்பட்டிருக்கும் நாடுகளில் ஏற்பட்டிருக்கும் நடுக்கத்தை நீக்க வழி தோன்றமுடியாமல் தவிக்கிறார்கள். கிழக்கிந்தியத் தீவுகளில் தென் பகுதியிலுள்ளவற்றின் நிலைமையும் இதுதான். இப்படிப்பட்ட நிலைமையில் ஜப்பான் மந்திரி சபைகள் ஒன்றையொன்று குறைகூறிக் கொள்வதைக் கண்டு நகைக்காதிருக்க முடியுமா ? ஒரு காலத்தில் மகா சிறப்போடிருந்த ஜப்பான் சூரியன் இப்போது மங்கிக் கொண்டிருக்கிறது. அதன் அழிவை ஆசிய நாடுகளும் பசிபிக் தீவுகளும் மகிழ்ச்சியுடன் காண்கின்றன.

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

செஞ்சேனையின் மீட்சிப் போக்கு

ஒரு பெரும் பட்டணத்தினின்று மற்றொன்றுக்கு செம்படைகள் பல தடைகளையுங் கடந்து முன்னேறிக் கொண்டு வருகின்றன. இதைத் தடுப்பது எப்படி என்பது தான் ஹிட்லருக்குப் பெரியதோர் பிரச்சினையாகி விட்டது. இதற்கு ஒரு வழி கண்டுபிடிக்க முடியாமல் திண்டாடுகிறார். மாஸ்கோ நகரத்தில் பெரு விழாக் கொண்டாடுகிறார்கள். ஏன்? லோ நகரத்தைக் கைப்பற்றியதைக் கருதி, பீரங்கிகள் முழங்குகின்றன. லோ நகரம் மட்டுமா ? ட்வின்ஸ்க், பையலிஸ்டாக், ஸ்டானிஸ்லோவோப், சிய யுலியாய், ப்ரெஸ்ட்-லிடாப்ஸ் ஆகிய பட்டணங்களையும் செம்படைகள் கைப்பற்றின. இப்போது வார்சா நகரத்தை செம்படைகள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன. அந்நகருக்குள் வசிக்கும் மக்கள் பெரிதும் அல்லற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். பல வருஷங்களாகக் கொடுமைகள் பலவற்றிற் குள்ளாகியவர்கள் மீட்சிக்காலம் நெருங்கிவிட்டது எனத் தெரிந்து, நகர வாயிலில் காத்திருக்கின்றனர். மகிழ்ச்சி பொங்கச் செம்படைகளை வரவேற்க இருகரங்களையும் உயர்த்திக் கொண்டிருக்கின்றனர். நாஜிக் கொடுமைகளின்று மீட்சியடைய போலந்து மட்டுமன்றி, எஸ்டோனியா, லட்வியா, லிதுவேனியா ஆகிய நாடுகளும் மீட்சி பெறத் தக்க நிலைமையில் தானிருக்கின்றன. லிதுவேனியாவின் தலை நகரான கோவ்ரோ பிடிபட்டுவிட்டது. பிற நாடுகளை மீட்கும் போராட்டத்தில் இப்போது தான் செம்படைகள் இறங்கி யிருக்கின்றன.

நார்மண்டியில் நேசப்படைகள் உறுதி

செம்படைகள் கடுமையாகவும், இடைவிடாமலும், ஈவிரக்கமில்லாமலும் முன்னேறிக் கொண்டு வருவதைப் போலவே தான், நார்மண்டியிலும் நேசநாட்டுப் படைகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. அங்குள்ள ஜெர்மன் படைகள் படும்பாடு மிகவும் அதிகம். முதலில் கூடான்ஸெசைப் பிடித்தார்கள். பிறகு நேரே தெற்கே வந்து க்ரான்வில்லவைப் பிடித்தார்கள். அதன் பிறகு அவ்ரான்செஸைப் பிடித்தார்கள். நாஜிகள் அணி வகுப்பில் பெரும் பிளவுகளை உண்டாக்கி விட்டார்கள். இந்த முன்னேற்றத்தினால் மேல் பகுதியில் போராடுவதற்கு ஜெனரல் அய்சினோவருக்கு மிகுந்த வசதி ஏற்பட்டுவிட்டது.

(6-ம் பக்கம் பார்க்க)

ஒரு பிடி அரிசி உலகைக் காக்கும்

செலவைச் சுருக்குதல் வெற்றிக்கு அறிகுறி

(மதுக்கூர் இளைய ஜமீன்தார் மிஸ்டர் எஸ். வி. ஆர். பி. கே. ஆர். கோபாலர்.)

முற்காலத்தில் நமது முன்னோர்களின் தேவைகள் மிகச் சொற்பமாகவே இருந்தன. அவைகளும் பெரும்பாலும் சுலபமாக கிடைக்கக் கூடியவையாகவும் இருந்திருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் வேண்டிய உணவுப் பொருள்கள் எல்லாம் கிராமங்களிலேயே பயிரிடப்பட்டு வந்திருக்கின்றன. கிராமத்துக் கொல்லர்கள், தச்சர்கள், கன்னார்கள், தட்டார்கள் முதலியவர்கள் கிராமத்தார்களுக்கு வேண்டிய இரும்பு சாமான்கள், மர சாமான்கள், பாத்திரங்கள், நகைகள் முதலியவைகளை செய்து கொடுத்து வந்தார்கள். கிராமத்தில் விளையும் முத்துக்கொட்டை, பின்னைக் கொட்டை, இலுப்பைக் கொட்டை முதலியவைகளின் எண்ணெய்கள் விளக்கு எறிப்பதற்கு பிரயோசனப்பட்டு வந்தன. கிராமத்தில் விளையும் பருத்தியை ஒவ்வொரு வீட்டிலுள்ள பெண்களும் நூலாக நூற்று வந்தார்கள். அப்படி நூற்கப்பட்ட நூலைக் கொண்டு சேணியர்கள் வேஷ்டி, புடவை முதலியவைகளை நெய்து வந்தார்கள். ஆகவே சமுத்திரக் கரை ஓரத்தில் உண்டாக்கப்படும் உப்பு தவிர, மற்றவை எல்லாம் கிராமங்களிலேயே கிடைக்கக் கூடியனவாக இருந்தன. சில கிராமங்களில் உப்பைக் கூட உவர் மண்ணிலிருந்து காய்ச்சி எடுத்து வந்தார்கள்.

தற்கால நிலை

தற்காலத்திலோ, உணவுப் பொருள்களில் சில தவிர, மற்ற நமக்கு வேண்டியவைகள் எல்லாம் தூர தேசத்திலிருந்து வரவேண்டியனவாக இருக்கின்றன. விளக்கு எரிக்கும் கெரோஸின் எண்ணெய், ஈரான், பர்மா முதலிய இடங்களிலிருந்து வரவேண்டி இருக்கிறது. நாம் உடுத்திக் கொள்ளும் துணிமணிகள் பம்பாய், அஹமதாபாத், இங்கிலாந்து முதலிய இடங்களிலிருந்து வரவேண்டியதாக இருக்கிறது. மற்றும் நமக்கு வேண்டிய பாத்திரங்கள் இரும்பு சாமான்கள் முதலியவைகளும் தொலை தூரத்திலிருந்தே வரவேண்டியிருக்கிறது. மேலும் நம் இந்தியாவில் விளையும் உணவுப் பொருள்கள் போதாமல், பர்மா, சைகோன், முதலிய இடங்களிலிருந்து வந்து கொண்டிருந்தன. இந்த நிலைமையில் கடந்த சில வருஷங்களாக நடந்து வரும் மகா யுத்தத்தின் காரணமாக, பர்மா, சைகோன் முதலிய இடங்களிலிருந்து வரவேண்டிய உணவுப் பொருள்களும் மற்றும் சில சாமான்களும் அறவே தடைப்பட்டு விட்டன. பம்பாய், அஹமதாபாத், ஈரான், இங்கிலாந்து, போன்ற இடங்களிலிருந்து வரவேண்டிய சாமான்கள் யுத்தத்தின் காரணமாக ரயில் வசதியும், கப்பல் வசதியும், பெரும்பாலாக தடைப்பட்டதினால், சரிவர வந்து சேர முடியவில்லை. இந்த நிலைமையில் ஒவ்வொருவரும் கால நிலைமையைத் தெரிந்து கொண்டு சிக்கனமாக நடந்து கொண்டால், நாமும் கஷ்டப்படாமல் சவுகரியப்படுவதோடு, பிறருக்கும் உதவி செய்தவர்களாவோம்.

மூன்று வகைத் தேவைகள்

நமக்கு வேண்டிய தேவைகளை மூன்று விதமாக பிரிக்கலாம். ஒன்று அத்தியாவசியம்; இரண்டு அவசியம்; மூன்று அனாவசியம். இவைகளில் அனாவசியத்தை அடியோடு நீக்க வேண்டும். அவசியத்திலும் முடிந்த வரையில் குறைக்க வேண்டியவைகளைக் குறைக்க வேண்டும். கிரோஸின் எண்ணெய்ப் பஞ்சம் ஏற்பட்டிருப்பதால், முன்னர் 10 விளக்குகள் ஏற்றின இடத்தில் மூன்று அல்லது நான்கு விளக்குகளும், 4, 5 விளக்குகள் இருந்த இடத்தில் ஒன்று இரண்டு விளக்குகளுடனும் நம்முடைய காரியங்களை நடத்த வேண்டும். இவையன்றி, தாம் பண்டை காலத்தில் உபயோகித்தது போல் நாட்டில் உண்டாகும் விளக்கெண்ணெய், இலுப்பை எண்ணெய் கடலை எண்ணெயும் உபயோகித்து வந்தால், கண்ணுக்குக் குளிர்ச்சி தருவதுடன், கிரோஸின் எண்ணைப் பஞ்சமும் நம்மைப் பாதிக்காது. அவைகளையும் எவ்வளவு அவசியமோ அதற்கு மேற்பட விடாமல் எரிய விட வேண்டும். அதுவே போல், விறகுப் பஞ்சத்தை நிவர்த்திக்க எவ்வளவு குறைச்சலாக உபயோகப்படுத்த முடியுமோ, அவ்வளவு குறைச்சலாக உபயோகப்படுத்த வேண்டும். முன் காலத்தைப் போலன்றி இப்போது டாம்பீக உடைகளும், விலையுயர்ந்த ஆடைகளும் அணிவது மிகவும் மட்டுப்பட்டுப் போய்விட்டது. அதிலும் கூடியவரையில், நம்மிடமிருக்கும் உடைகளையே எவ்வளவு காலம் அணியமுடியுமோ அவ்வளவு உபயோகிக்க வேண்டியது. புது உடைகள் வாங்குவதைக் கூடியவரை மட்டுப்படுத்த வேண்டியது அவசியம். இப்போது ரயில் வண்டிகளின் போக்குவரத்து குறைந்ததின் காரணமாக, ரயில் பிரயாணம் மிகவும் கஷ்டமாகிவிட்டது. அத்யாவசியமாகப் போக வேண்டிய காரியங்களுக்குத் தவிர, மற்றப்படி சில்லரைக் காரியங்களுக்கு போக வேண்டியதை நிறுத்தினால், அவர்களும் கஷ்டப்படாததோடு பிறருக்கும் யுத்தத்திற்கும் பேருபகாரம் செய்ததாகும்.

சர்க்கார் அதிகாரிகள் கவனிக்க

இந்த விஷயத்தில் சர்க்கார் உத்யோகஸ்தர்களும் உத்யோக தோரணையிலோ, கேஸ்கள் விஷயமாகவோ அவர்களிடம் வரும் கட்சிக்காரர்களைப் பல தடவை வந்து அலையும்படி விடாமல், அவர்கள் வந்த வேலைகளைச் சீக்கிரம் முடித்து அனுப்பினால், பிரயாண நெருக்கடி மிகுதியும் குறைவுபடும். தொலை தூரத்திலுள்ள கிராம உத்யோகஸ்தர்களை அடிக்கடி தாலூக்கா அதிகாரிகள் தாலூக்காவிற்கு வரவழைப்பதைக் குறைத்து, ஷி அதிகாரிகள் கிராமங்களுக்கு சமீபமான இடங்களில் 'முகாம்' செய்து அவ்வப்போது அவர்களை வரவழைத்தால் பிரயாண நெருக்கடியைத் தீர்க்கப் பேருதவி செய்வதாகும்.

உணவு முறையில் எச்சரிக்கை

போஜன விஷயத்தில் பல வித பதார்த்தங்கள் செய்வதைக் குறுக்கி அத்தியாவசியமான இரண்டொரு பதார்த்தங்களை மட்டும் செய்யும் பக்ஷத்தில், விறகு அதிகம் செலவாகாததோடு, உணவுப் பொருளும் மிச்சமாவதால், உணவுப் பொருள் கிடைக்காத இடங்களுக்கு உபயோகப்படுத்த பிரயோஜனமாகும். ஒரு மனிதனுக்கு வேண்டிய ஆகாரம் 32 கவாளம் என்பதாக ஒரு கணக்கு உண்டு. அப்படிச் சாப்பிடுவதில், ஒரு கவாளத்தைக் குறைத்து விடும் பக்ஷத்தில், அதனால் அவனுக்கு யாதொரு தீங்கும் நேர்ந்து விடப் போவதில்லை. அதுவே போல், இந்தியாவிலுள்ள 400 கோடி ஜனங்களும் தலா ஒரு கவாளத்தைக் குறைக்கும் பக்ஷத்தில், அப்படிக்கு மீதமான ஆகாரம் 10 கோடி ஜனங்களுக்கு ஒரு வேளைக்கு உணவுக்கு போதுமானதாக இருக்கும். ஒரு குடும்பத்தில் ஒரு கை அரிசி எடுத்து வைக்கும் பக்ஷத்தில், அப்படி இந்தியாவிலுள்ள ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் எடுத்து வைக்கப்பட்ட அரிசி எல்லாவற்றையும் ஒன்று சேர்த்தால் சுமார் ஒரு கோடி ஜனங்களுக்கு ஒரு வேளைக்கு போதுமான ஆகாரம் ஆகும். ஒவ்வொருவரும் சாப்பிடும் பொழுது சிறு சிறு சோறுகளை வீணாகாமல் சுத்தமாக சாப்பிடுவதில்லை. அப்படி எறியப்படும் சில சோறுகளை எல்லாம் ஒன்று சேர்த்துப் பார்த்தால் குறைந்தது....10 பேருககாவது ஒரு வேளைக்கு போதுமான ஆகாரமாகும். நம் நாட்டில் சோறு இல்லாமல் பட்டினியால் இறக்கும் மனிதர்களை நாம் வீணாக்கும் உணவுப் பொருள்களைக் கொண்டு அநேக லக்ஷம் பேர்களை உயிர்ப்பிக்கலாம் என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் தெரிந்திருந்தால், அநேகம் லக்ஷம் பேர்களுடைய உயிர்களை காப்பாற்ற ஏதுவாக இருக்கும். தெய்வப் புலமை திருவள்ளுவ நாயனார் கலியாணம் செய்து கொண்ட பிறகு, அவர் சம்ஸாரம் அவருக்கு அன்னம் பரிமாற முதல் முதலாக வந்த போது, அவர் அந்த அம்மாளை ஒரு ஊசியும் ஒரு பாத்திரத்தில் ஜலமும் கொண்டு வந்து

(10-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

தீர்க்காலோசனையின் பேரில் வகுக்கப்பட்டது தான் நேச நாட்டுப் படைத் தலைவரது திட்டம். இத்திட்டப்படியே தான் நம் படைகள் விசிறிபோல் சிதறிப் பிரிந்து வளைந்தன. இதன் பலாபலன் நாளடைவில் தான் தெரியும். இந்தக் கடும் போராட்டத்தைக் கண்டு எதிரிப் படைத் தலைவர்கள் திகைக்கிறார்கள். ஒய்வு ஒழிச்சலின்றி ஹிட்லருடைய நாட்டிற்குள்ளாகவே போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆகவே, அவருக்கு ஓய்வு என்பதே கிடையாது. இரண்டு நாட்கள் அடுத்தடுத்து 1,000 பெரிய வெடிகுண்டு விமானங்கள் கிளம்பிப் போய் ஜெர்மனிக்குச் சொந்தமான மார்ஸ்பர்க் லியுனா சேர்க்கை எண்ணெய்ச் சாலையைத் தாக்கின. இந்தத் தாக்குதலில் பிரிட்டிஷ் விமானப் படையும் அமெரிக்க விமானப் படையும் மிகச் சிறந்த ஒற்றுமையுடன் விளங்கின. ஆகவே தான் 'புழுகரசன்' கொப்பல்ஸ் ஊளையிட ஆரம்பித்துவிட்டார். நெடுங்காலமாகக் கஷ்டத்திற் குள்ளாயிருக்கும் தன் நாட்டு மக்கள் முன்னதாக இப்படி இவர் ஊளையிட வேண்டிய அவசியம் நேர்ந்துவிட்டது. எல்லா வகைப் பெருங் கஷ்டங்களி லிருந்தும் ஆபத்துக்களி லிருந்தும் தப்பி மீள வேண்டு மென்று பிரலாபிக்கிறார். ஜெர்மன் விமானிகள் தமக்கு எவ்விதக் கஷ்டமோ ஆபத்தோ ஏற்படவில்லை யென்று தான் கூறினார்கள். இவர்கள் இப்படிக் கூறுகிறார்கள் என்பது கொப்பல்சுக்கும் தெரியும். அவர்கள் விடுக்கும் குண்டு விமானங்களால் ஓரளவிற்கு தொல்லை நேரலாம். ஆனால், யுத்த முறைப்படி இது பெரும் சேதம் விளைக்கத் தக்க தெனக் கூறுவதற்கில்லை. ஜெர்மனியில் ஏராளமான சேதத்தை விளைவித்திருக்கின்றன நேச விமானங்கள். அப்படியிருந்தும், பிரிட்டிஷ் மக்களை வெருட்டிவிடலாமென்று ஜெர்மானியர்கள் நினைத்தால், அவர்களை என்னவென்று கூறுவது. குறியில்லாமல் விடப்படும் குண்டு விமானங்களால் அல்லற்பட்ட லண்டன் நகர மக்களும் மற்றவர்களும் கண்டவற்றையும் கூறியவற்றையும் கொண்டு ஆராய்வோமானால், பிரிட்டிஷ் மக்களின் மனோதைரியத்தை இன்னும் ஜெர்மானியர்கள் உணர்ந்து கொள்ளவில்லை யென்று தெரிகிறது.

மன்னர் பிரான் இத்தாலி விஜயம்.

கமால் ராம் 8-வது பஞ்சாப் படையைச் சேர்ந்த ஒரு சிப்பாய். இவருக்கு விக்டோரியா பதக்கம் பரிசளிக்கப்பட்டது. இந்தப் பதக்கத்தை மாட்சிமை தங்கிய 6-வது ஜார்ஜ் மன்னர் அவருக்கு அணிவித்தார். விக்டரி பதக்கத்தை விட உயரிய பரிசு வேறெதுவும் கிடையாது. இவருக்கு வயது 19 தான். படையினர் அனைவரினும் இவர் தான் மிகவும் இளையவர். இந்தப் பதக்கம் அவருக்கு அணிவிக்கப்பட்ட பிறகு, அவரை மற்ற சிப்பாய்கள் தம் தோட்களில் தூக்கிக் கொண்டாடினார்கள். இந்தப் பரிசளிப்பு விழாவிற்கு வரும் பொருட்டு இவருக்கு 8-ம் படை ஒரு விசேஷ விமானத்தை யனுப்பியது. மாட்சிமை மிக்க மன்னர் பிரான் இத்தாலியில் 8-ம் படையுள்ள பகுதியில் நூற்றுக் கணக்கான மைல்கள் விமானத்திலும் தரையிலும் பிரயாணம் செய்த போது, இந்த இளைஞருக்கு இந்தப் பரிசை வழங்கினார். சமீபத்தில், இந்தியா மந்திரி மிஸ்டர் எமரி கூட, காமன்ஸ் சபையில், இந்தப்படையினர் இந்த யுத்தத்தில், ஆப்பிரிக்கா, ஆசியா, ஐரோப்பா ஆகிய போர் முனைகள் பலவற்றிலும், தம் வீரத்தையும் இராஜ பக்தியையும் மெய்ப்பித்திருக்கிறார்களென்று குறிப்பிட்டார்.

இந்தியப் படைகளுக்குப் பாராட்டு.

தானாகவே திரண்ட உலகப் பெரும் படை யெனக் கூறி அவர் இந்தப் படைகளைப் புகழ்ந்திருக்கிறார் இந்தியப் படைகள் ஆற்றிய அருஞ் செயல்களைக் குறித்து மிஸ்டர் எமரி காமன்ஸ் சபையில் பேசிய போது, அனைவரும் கரகோஷம் செய்து தம் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். இந்த யுத்த சரித்திரம் எழுதப்படும் போது, இந்தியர்களின் வீரக் காதைகளும் அங்கே எழுதப்படும். மிஸ்டர் எமரி மேலும் கூறியதாவது:—

"இந்தப் போராட்டத்தில், இந்தியர்கள் ஐரோப்பியர்கள் என்னும் வேற்றுமைகள் நீங்கி, சகோதரத்துவம் மேவி விட்டது. படையினருள் இன வேற்றுமை என்பதே இப்போது கிடையாது."

இந்தத் தலை சிறந்த வெற்றிகள் இந்தியா மந்திரி கூறிய வற்றை அரண் செய்கின்றன. தாம் அபகரித்த நாடுகளைக் காப்பாற்றும் பொருட்டு ஜெர்மானியர்களும் ஜப்பானியர்களும் நியமித்துள்ள அயோக்கியர்களின் முகத்திற்கும், இன்பந் தவழும் இந்தியப் படையினரின், இந்திய உத்தியோகஸ்தர்களின் முகங்களுக்கு முள்ள வேற்றுமை, தெளிவாகக் காணப் படுகிறது.

ஜப்பானுக்குத் தலைவலி.

பசிபிக் மகா சமுத்திரத்தில் அமெரிக்கர்கள் அதிசயிக்கத் தக்க முறையில் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். இதனால், ஜப்பானியர்கள் வயற்றில் புளியைக் கரைத்து விட்டிருக்கும் என்பது பற்றி சந்தேக மில்லை. ஜப்பானுக்கே உடனடியாக ஆபத்துண்டாகக் கூடும். இதனால் ஜப்பான் மந்திரி சபைக்குத் தலைவலி ஏற்படக் கூடும். டோஜோ மந்திரி சபை ராஜிநாமாச் செய்ததற்கு செய்பானை அமெரிக்கா கைப்பற்றியது தான் காரணமென்று சொல்லலாம். இப்போது குவாமும் டினியனும் முழுதும் அமெரிக்கர்கள் வசமான படியால், ஜப்பானியர்களின் பீதி அதிகரித்திருக்கிறது. இவை மட்டுமன்றி, அமெரிக்கப் படைகள் சபாங்கையும் தாக்கின. அந்தத் துறை முகத்தில் மிஞ்சியிருந்த அனைத்தையும் நாசஞ் செய்தன. அன்றியும் கொரியாவின் தலை நகரான முக்டெனையும், தென் சீனாவில் ஜப்பானியர் வசப்பட்டிருந்த டெய்ன் ஸ்டீனையும், அமெரிக்கக் கோட்டை விமானங்கள் தாக்கின. மகத்தான 14-வது இந்தியப் படை மணிப்பூர் பகுதியினின்று எதிரிகளை விரட்டி விடத் தக்க நிலைமையிலிருக்கிறது. மிட்கியானாவும் பிடிபட்டு, இந்தப் போராட்டமும் முடிவடையத் தக்க நிலைமையி லிருக்கிறது. இப்போது மியிட்கியானாவிலேயே போராட்டம் நடை பெறுகிறது. ஜப்பானிய மந்திரி சபையை மாற்றி யமைப்பதனாலேயோ, இரண்டொருவரை மட்டும் நீக்கிவிட்டு அவர்களுக்குப் பதிலாகப் புதியவர்களை நியமித்துக் கொள்ளுவதனாலோ இதனுடைய பலா பலன்கள் மாறப் போவதில்லை. இதற் கிடையில் நமக்கு பர்மாவிலும் பசிபிக் தீவுகளிலும் கிடைத்த வெற்றிகளைப் பற்றி நாம் பெரிதும் மகிழ்ச்சி யடைகிறோம். சமீபத்தில் 14-ம் படையினரை வரவேற்கும் பேறு சென்னைக்குக் கிடைத்தது. இந்தப் புகழ் வாய்ந்த படையினர் தத்தம் சொந்த ஊர்களுக்குப் போகு முன் இங்கே இளைப்பாறிப் போவார்கள். இவர்கள் தம் சொந்த ஊருக்குப் போனவுடன் அங்கே பெரு விழாக்கள் நடைபெறுமென்று சொல்லலாம்.

மீட்சி வாரம்

இவ்வாரம் நிகழ்ந்துள்ள உலக சம்பவங்களைப் பார்த்தால், எல்லாப் போர்முனைகளிலும் எதிரிகளுக்கு எண்ணற்ற தோல்விகள் நேர்ந்தன வென்பது விளங்கும். நேச நாட்டினரும் ஒடுக்கப்பட்டிருந்த நாட்டினரும் மீட்சி பெற்று மகிழ்கின்றனர். உலகம் முழுவதிலுமுள்ள மக்கள் எதிர்பார்த்திருந்த காலம் நெருங்கிவிட்டது. வட ஐரோப்பாவிலும் பால்டிக் பகுதிகளிலும் வசித்த மக்களில் பலர் மாண்டு போயினர். மிகுந்திருந்தவர்களோ ஜெர்மன் ரகசியப் போலீசாரின் கண்காணிப்பில் அஞ்சி ஒடுங்கி வாழ்ந்து வந்தனர். அவர்கள் இந்தப் பருவம் எப்போது வருமென்று பொறுமையுடன் காத்துக் கொண்டிருந்தனர். நார்மண்டி கிராமங்களிலுள்ள விவசாயிகள் நல்ல பலமுள்ளவர்கள். நார்மன் இனத்தைச் சேர்ந்தவர்கள். மனோஉரம் கொண்டவர்கள். தம்மை மீட்க வரும் படையினரை ஆனந்தக் கண்ணீர் கொண்டு வரவேற்கின்றனர். இவ்வாறாக, ஐரோப்பா முழுதுமே இம் மீட்சியை வரவேற்கிறது என்று சொல்லலாம். இம்மீட்சிப் படலம் ஐரோப்பாவில் மட்டுமல்ல. கீழக்கோடியிலுள்ள பசிபிக் சமுத்திரத்தில் மாரியானா தீவுகளிலுள்ள மக்கள், தம்மை மீட்க விமான மீது வருகிறவர்களை தமது ரட்சகர்கள் என்று கூறி வரவேற்கின்றனர். இந்தியாவுக்கு அருகிலுள்ள போர் நிலைமையும் மிகவும் ஊக்கந் தருவதா யிருக்கிறது. வடபர்மாவில் நிலைமை சீர்படுவதாகத் தெரிகிறது. பர்மாவினின்று ஜப்பானியர்களை விரட்டி யடிக்கவே முடியாமற் போய்விடுமோ வென்று கவலைப்பட்ட காலமொன்றுண்டு, அந்த நிலை இப்போது மாறிப்போய்விட்டது. நேசநாடுகளின் கூட்டுறவினால் எல்லாப் போர்முனைகளிலும் நேசநாடுகளுக்கே வெற்றி. இது உண்மையிலேயே ஒரு மீட்சிவாரமென்று சொல்லலாம்.

அபாய அறிவிப்பு

'அபாய அறிவிப்பு—வண்டியை நிறுத்த கைபிடியை இழு' என்று ரயில் வண்டிகளில் பல இடங்களில் எழுதப்பட்டிருக்கும், பார்த்திருக்கிறீர்களா? இதேபோல, ஜெர்மனியில் உள்ள ஒவ்வொருவர் மனக்கண் முன்னாலும், இப்பொழுது, **'அபாய அறிவிப்பு—ஜெர்மனி பாழாவதை நிறுத்த ஹிட்லரைக் காலை வாரிவிடு'** என்ற பதங்கள் கொட்டையாகக் காட்சியளித்துக் கொண்டேயிருக்கும். அது காரணமாக ஜெர்மன் மக்கள் மனங் குழம்பியிருக்கக் கூடும். பூனைக்கு மணி கட்டுவது யார் என்ற பிரச்னை எலிகளின் கூட்டத்திலே எழுந்ததோ இல்லையோ! அதேமாதிரி, ஹிட்லரைக் காலைவாரி விடுவதா? யார் விடுவது? என்ற கேள்வியை ஜெர்மன் மக்கள் தம்மைத் தாமே கேட்டுக்கொண்டிருப்பார்கள். அதற்கேற்ற விடை அவர்களுக்குக் கிடைத்திராது. ஹிட்லரையாவது, துணிந்துபோய் காலைவாரி விடுவதாவது? காலைப் பிடித்துத் தூக்கும் வரை அவர் சும்மா இருக்கவேண்டுமே! குடும்பத்துடனேயே பொசுக்கி எரித்து விடமாட்டாரா அதற்கப்பால்? என்றெண்ணி ஒவ்வொருவரும் முணுமுணுத்துக் கொண்டிருக்கக் கூடும். ஆனாலும், நல்ல இருட்டு வேளையில், ஆகாச வாணம் ஒன்று மேலே சென்று வெடித்து, வெள்ளை வெளேலென்ற மத்தாப்புப் பொடிகளை உதிர்த்து, ஊரெல்லாம் சூழ்ந்திருக்கும் இருளெல்லாம் போகும்படி வெளிச்சத்தை உண்டாக்கி, பளீச் சென்று தெரிவதுபோல, தங்களுக்கு பேராபத்து அதிவேகமாக நெருங்கிக் கொண்டிருப்பதை ஜெர்மன் மக்கள் நன்றாக உணர்ந்திருப்பார்கள். ஆனால், அவர்களாகப் பாதி, ஹிட்லராகப் பாதி சேர்ந்து ஹிட்லருக்குப் பிரமாத அதிகாரம் ஏற்படும்படியான நிலைமை வந்து விட்டது. துணிந்து எவனும் எதுவும் செய்யும்படியாக இல்லை.

சேனாதிப்திகளுக்கு ஹிட்லர் வேம்பு

ஜெர்மானியர் என்று சொல்லும் பொழுது, ஜெர்மன் சேனாதிபதிகளும் அதிலே உட்பட்டவர்கள் தானே? அவர்களுக்கும் ஹிட்லரைக் கண்டால் வேம்பாகி விட்டது. அவர் செய்யும் காரியங்கள் அவர்களில் பலருக்குப் பிடிக்கவில்லை. அதோடு, ஜெர்மன் பொது மக்களின் நோக்கமும் அவர்களுக்குச் சாதகமாக இருக்கிறது. இதை உத்தேசித்துத்தான், ஏற்கெனவே பெரிய அதிகாரத்திலிருந்து தள்ளப்பட்ட சிலரும், இப்பொழுது ஹிட்லருடன் நெருங்கிப் பழகுகிறவர்களில் சிலரும் சேர்ந்து சதி செய்து, ஹிட்லரைக் கொல்ல முயற்சித்தார்கள். அதென்னடா எழவென்றால், அவர்களது முயற்சி வீணாகி விட்டது. ஹிட்லரும் அவரது சீடப் பிள்ளைகளும் சும்மா இருப்பார்களா? அசல் ராக்ஷஸர்களாகவே மாறி விட்டார்கள். இத்தனை காலம் மட்டும் என்ன வாழ்கிறது என்று கேட்பீர்கள். இத்தனை காலம் ராக்ஷஸகுணம் மட்டும் இருந்தது. இப்பொழுது சர்வமும் ராக்ஷஸ மயமாகவே மாறியிருப்பார்கள் அவர்கள். இப்படியா இருக்கிறது விஷயம் என்று, மேற்படி சதியில் சம்பந்தப்பட்டவர்களை யெல்லாம் சுட்டுத் தள்ளச் செய்தார்கள். கிடைத்தது சாக்கு என்று, அட்டகாசம் செய்ய முன் வந்துவிட்டார்கள்.

கொப்பல்சுக்குப் புது உத்தியோகம்

இவ்வளவு காலமாக வாயடைத்துக் கிடந்த கொப்பல்ஸ் துரை இப்பொழுது, மழை பெய்ததும் கத்தத்தொடங்கும் 'மிடர்த்தப்பளை' மாதிரி கத்த ஆரம்பித்திருக்கிறார். அவருக்கு ஆள் சேர்க்கும் உத்தியோகத்தையும் ஹிட்லர் கொடுத்திருக்கிறார். கேட்கவேண்டுமா? உடனே ஒரு உத்திரவு போட்டுவிட்டார்.

இவ்வளவு காலமாக, அது செய்கிறேன், இது செய்கிறேன், வீட்டிலே கல்யாணம், கார்த்திகை, கருமாதி, பாட்டிக்கு மூச்சுக்குத்து, பேத்திக்குப் பிரசவ நோய், என்றெல்லாம் சொல்லிக் கொண்டு சும்மா இருந்த ஆடவர்கள் அனைவரும் ஆகஸ்ட்டு 15 தேதிக்குள் தாமாகவே யுத்த சேவை செய்ய முன் வந்து, பெயரைப் பதிவு செய்து கொண்டு விட வேண்டும். அவரவர்களது வயசு, சக்தி ஆகிய இரண்டிற்கும் தக்கபடி வேலைகள் கொடுக்கப்படும். இப்படி தாமாகவே யுத்த சேவை செய்ய முன் வராதவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கொப்பல்ஸ் துரை தெரிவித்து விட்டார். ஜெர்மனியில் உள்ள ஆண் பூண்டே இல்லாதபடி அடித்து விட இந்த நாஸித் தலைவர்கள் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது. யமனே இத்தனை நாஸித் தலைவர்கள் ரூபத்தில் ஜெர்மனியில் வந்து பிறந்திருக்கிறானோ என்று கூட எண்ணவேண்டி யிருக்கிறது.

கொப்பல்ஸ் துரை இதோடு நின்றுவிடவில்லை. ஹிட்லர் உயிர் தப்பிய அதிசயத்தையும், அது ஆண்டவன் செயல் என்றும் ஒரு பெரிய பாட்டுப் பாடி யிருக்கிறார். அதற் கப்பால், நேச தேசத்தார்களை ஒரு மிரட்டு மிரட்டி யிருக்கிறார்.

நேச நாடுகளுக்குச் சௌகரியங்கள்

இப்போதைக்கு சில விஷயங்களிலே நேச தேசத்தார்க்கு ஜெர்மானியரை விட சௌகரியங்கள் அதிகமாக இருக்கின்றன என்றும், இந்த யுத்தத்தைப் புது முறையில் நடத்தத் திட்டம் போட்டு, அதற்கான சாதனங்களையும் அதி வேகமாகத் தயாரிக்கத் தொடங்கி விட்டதாகவும், அந்தத் திட்டம் அமுல் படுத்தப்படும் பொழுது, நேச தேசத்தவர் திகைத்து பிரமித்து இடிந்து போய் நின்று விடுவார்கள் என்றும் அவர் ஜம்பமடித் திருக்கிறார். அது மட்டுமா? சமீபத்திலே அவர், ஜெர்மனியின் புது ஆயுத உற்பத்தி சாலைகளைப் போய்ப் பார்வை யிட்டாராம். அந்த ஆயுதங்களைப் பார்த்து, அவற்றின் சக்தியைக் குறித்துக் கேள்விப் பட்டதும் அவரது நெஞ்சே படபட படபடவென்று அடித்துக் கொள்ளத் தொடங்கி விட்டதாம்.

பனங்காட்டு நரி அஞ்சாது

இந்தச் சலசலப்பிற் கெல்லாம் பனங்காட்டு நரிகளாகிய நேச தேசத்தார் பயப்படப் போகிறார்களா என்ன? நாலுபக்கங்களிலும் பிரமாதமாகப் பற்றிக் கொண்டு எறியும் வீட்டிற்குள் சிக்கிக் கொண்டானாம் ஒரு பயில்வான். அங்கிருந்து கொண்டே, "அடே! நெருப்பை அணைக்கிறாயா இல்லையா? வெளியே வந்தேன்னா மண்டையைப் பிளந்திடுவேன். என் விஷயம் தெரியுமோல்லியோ?" என்று கத்தினானாம் அவன். அது மாதிரி தானிருக்கிறது கொப்பல்ஸின் கூச்சல்.

தன் முடிவைத் துரிதப்படுத்துகிறார்

ஆனால் ஒன்று. ஹிட்லரும் அவரது சகாக்களும் மகா துணிச்சல்காரர்கள். அதிலும் ஹிட்லர் கட்டைப் பிரம்மசாரி. "சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கால்" என்ற பழமொழிப்படி வாழ்பவர் அவர். ஆகவே, அவர் எது வேண்டுமானாலும் செய்யச் சித்தமாவார். ஆனால், அவரது முயற்சிகள் அவர் எதிர்பார்த்த பலனைத் தரா என்பது மட்டும் நிச்சயம். வேண்டுமானால், அவர், ஆளில்லாது பறக்கும் வெடி விமானங்கள் போன்ற சில புது கோர ஆயுதங்களையும், ரொம்ப முட்டிப் போனால் விஷ வாயுப் பிரயோகத்தையும் கைக் கொள்ளலாம். அதையெல்லாம் நேச தேசத்தவர்கள் எதிர்பாராமலில்லை. விஸ்வாமித்ரர் கோபங்கொண்டு, தவமிருந்த வசிஷ்டர் மீது பாணங்களை யெல்லாம் வீச, அவை யனைத்தும் வசிஷ்டரை எதும் செய்யாது, அவரது பாதங்களில் வீழ்ந்து பாழாகிக் கொண்டிருந்தது போலவே, ஜெர்மனியின் முயற்சிகள் எல்லாம் வியர்த்தமாகப் போகின்றன. அதில் சந்தேகமே யில்லை. இது காரணமாக ஜெர்மன் மக்களுக்கே அபாயம் அதிகரிக்கும். அந்த முயற்சிகளால், ஹிட்லர் இந்த யுத்தத்திற்கும், தனது பயங்கர ஆட்சிக்கும், தனக்கும் உண்டான முடிவைத் துரிதப்படுத்துகிறார் என்பது உண்மை.

ருஷ்யர் வேகம் சரித்திர பிரசித்தம்

ஒரு விஷயம். இப்பொழுதுள்ள போர் நிலைமை, நம்மைப் பின் வருமாறு எண்ணச் சொல்லுகிறது. ஐயோ! ருஷ்யர்கள் முன்னேறும் வேகம் சரித்திரப் பிரசித்தமாகி விட்டது. இன்று வார்ஸாவிலிருந்து நூறு மைல்களுக் கப்பால் செஞ்சேனை என்ற செய்தி வருகிறது. நான்கு நாட்கள் கழியு முன், "செஞ்சேனை வார்ஸா நகரைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. அந்நகரிலிருந்து ஆறு மைல் தூரத்திலே ஒரு வியூகம் போல் அணிவகுத்து முன்னேறிக் கொண்டிருக்கிறது." என்ற செய்தி வருகிறது.

இதை அங்குள்ள யுத்த நிருபர் எழுதி, ரேடியோ மூலம் உலகெங்கும் பரப்பி, அது பத்திரிகைகளில் அச்சிடப்பட்டு, அந்த மை உலர்ந்து, வாசகர்கள் அச் செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் பொழுதிற்குள், செஞ்சேனைப் படைகள் வார்ஸாவிற்குள் புகுந்து, சண்டை போட்டு, அங்கு வெற்றிக் கொடி நாட்டி விட்டு, மேலே போய் விடுவார்கள் போலிருக்கிறது.

ருஷ்யர் ஆனந்தம்

ருஷ்யாவில் இன்று மக்கள் ஆனந்தக் கூத்தாடிக் கொண்டிருக்கிறார்கள் ஒரு புறம். ஸ்டாலினுக்கு வேலை சரியாக இருக்கிறது. அவரது படைகள் தினம் பல பெரிய நகர்களையும், பல நூறு சிறு ஊர்களையும் ஜெர்மனியரின் பிடியிலிருந்து மீட்டு வருகிறார்கள். முக்கியமான நகரங்களை மீட்கும் பொழுதெல்லாம், ஸ்டாலின் அறிக்கை விடுவதெனத் தீர்மானித்திருக்கிறார். அந்தத் தீர்மானப்படி தினம் விடிந்தால் அவர் ஒரு அறிக்கை விட வேண்டியிருக்கிறது. இன்னொருபுறம், ருஷ்யத் தொழிற்சாலைகள் மேலும் மேலும் ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும், விமானங்களையும், டாங்கிகளையும், முக்கியமாக கவசந் தாங்கிய லாரிகளையும் தயாரித்துத் தள்ளிக் கொண்டே இருக்கின்றன.

தப்புவதிலே கண்

பால்டிக் நாடுகளிலே, பெரிய நாஸிப் படை ஒன்றிருக்கிறது. அதனை அப்படியே அமுக்கிவிட ருஷ்யப் படைகள் முயலுகின்றன. ஆனாலும், நாஸிகள் அதி வேகமாகப் பின்வாங்கி வருகிறார்கள் எங்கும் தமக்குச்சேதமானாலும், அந்தச் சேதத்தின் அளவைப் பெருக விடாமல் அவர்கள் பார்த்துக் கொள்ளுகிறார்கள். பால்டிக் நாடுகள் வேண்டுமானால் போகட்டும். ருஷ்யாவிலே போன தெல்லாம் போகட்டும், போலந்து போனாலும் பரவாயில்லை; யுத்தத்திற்குப் பின் ஏதோ ஜெர்மன் ஆண் பிள்ளைகள் என்று சிலராவது இருக்க வேண்டுமே, எதிர்காலத் திற்குப் பிரஜா விருத்திக்கு. இல்லாவிட்டால் ரொம்ப சிரமமாகப் போய் விடுமே என்று எண்ணுபவர்கள் போல, ஜெர்மன் சேனாபதிகள், தப்புவதற்குண்டான மார்க்கங்களிலேயே கண்களை வைத்திருக்கிறார்கள்.

இல்லாவிட்டால், இவ்வளவு துரிதமாக ருஷ்யர்கள் முன்னேற முடியுமா என்ன ? வடக்கே பால்டிக் நாடுகள் மூலமாகவும், நடுமத்தியிலே போலந்தின் தலை நகரமான வார்ஸாவை நெருங்கியும் தெற்கே செக்கோஸ்லோவேகியா நாட்டை நோக்கியும் ருஷ்யப் படைகள் உற்சாகத்தோடு முன்னேறிக் கொண்டிருக்கின்றன. அவற்றிற்குத் தடையோ, ஓய்வோ ஏற்படுவதாகவே காணோம்.

அப்புறம் ?

இந்த வார்ஸாவிலிருந்து காக்கை பறக்கும் பாதையாகப் பார்த்தால், ஜெர்மனியின் தலை நகரம் 350 மைல் தூரத்தில் தானிருக்கிறது. வார்ஸாவை ருஷ்யர்கள் பிடித்து விட்டால், அப்புறம் சென்னைக்கும் மதுரைக்கும் உள்ள தூரந்தான் அதற்கும் பேர்லினுக்கும். அப்பால், பிரிட்டிஷ், அமெரிக்க விமானிகள் மட்டுமின்றி, ருஷ்ய விமானிகளும் குதூகலத்தோடு பேர்லின் நகர் மீது குண்டுகள் போடக்கூடும்.

ருஷ்யர்களுக் கிருக்கிற திட நம்பிக்கையைப் பாருங்களேன். ருஷ்ய சினிமா காமிராக்காரர்கள், ருஷ்யர்கள் அசல் ஜெர்மன் எல்லையைக் கடந்து, ஜெர்மன் மண்ணில் கால் வைப்பதைப் படம் பிடிக்கச் சித்தமாகக் காத்திருக்கிறார்களாம். இனி ருஷ்யர்கள் வெற்றி காணும் வரை நிற்கவே போவதில்லை.

இத்தாலியிலே !

தெற்கே, இத்தாலியிலேயும் ஜெர்மானியர்களுக்கு ஊக்க மூட்டத் தக்க காரியங்கள் நடப்பதாகத் தெரியவில்லை. ஒவ்வொரு நதியும், ஒவ்வொரு மலையும், ஒவ்வொரு குன்றும், ஒவ்வொரு நகரமும் நேசப் படைகளின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்து மென அவர்கள் கனவு காணுகிறார்கள். ஆனால், ஒவ்வொரு இடத்திலும், கடும் போருக்குப் பின், நாஸிப் படைகள் பின் வாங்கவே நேரிடுகிறது. இதனால் ஏற்படும் நஷ்டத்தை ஈடு கட்ட நாஸிப் படைத் தலைவர்களால் முடியவே இல்லை. பிளாரென்ஸ் நகர் வரை நேசப் படைகள் சென்று விட்டன. முழு இத்தாலியையும் விட்டு நாஸிகளை வெளியே துரத்தும் வரை, ஐந்தாவது எட்டாவது சேனை வீரர்கள் ஓய்வு எடுத்துக்கொள்ளப் போகிறார்களா என்ன ? அதேது ?

மேற்கே என்ன ?

மேற்கே, நார்மண்டியிலே, அமெரிக்கப் படைகளின் வெற்றிகள் பிரமாதமாக யிருக்கின்றன. மற்றப் படைகளும் வீரத்துடனேயே போராடுகின்றன. ரோமல் என்ன வெல்லாமோ ஜகஜால வேலைகள் தான் செய்து பார்க்கிறார். ஒரு இடத்திலே, அவரே அடிப்பட்டு, ஆறு மணி நேரம் கவனிப்பாரற்று மூர்ச்சித்துக் கிடந்ததாக ஒரு செய்தியும், அவர் இறந்து போனதாக ஒரு செய்தியும் வெளியாயிற்று. அவரது டாங்கிப் படைகள் ஓடியாடிப் பார்க்கின்றன. அவை உக்ரமாகப் போராடுவதால், நேசப் படைகளின் முன்னேற்றம், ''டேயப்பா !'' என்று பார்த்துப் பிரமிக்கும்படியாக இல்லை. ஆனாலும், மெள்ள மெள்ள ஹிட்லரின் படைகள் பின்வாங்கிக்கொண்டு தானிருக்கின்றன.

இந்த இரண்டாவது போர் முனை ஆரம்பிக்கப்படவில்லையே என்று தான் ஸ்டாலின் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார். இது ஆரம்பமானது காரணமாகத் தான், அவரது படைகளுக்கு சௌகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நேச தேச வெடி விமானங்கள் ஜெர்மனி மீது விடாது பறந்துகொண்டே யிருக்கின்றன.

துருக்கி அறுத்துக் கொள்கிறது ?

இந்த லக்ஷணத்திலே, துருக்கி வேறே நேச நாடுகளோடு சேர்ந்து கொள்ளப் போகிறதாம். ஜெர்மனியோடு 'டூ' போடப் போகிறதாம். ஜெர்மனியில் உள்ள துருக்கியர்களுக்கு துருக்கி சர்க்காரும், துருக்கியில் உள்ள ஜெர்மானியருக்கு, ஜெர்மன் சர்க்காரும், எந்த நிமிஷத்திலும் புறப்படச் சித்தமாயிருக்க வேண்டுமென்று உத்தரவு போட்டு விட்டார்களாம். நேச நாட்டினர் துருக்கிப் பிரதிநிதியை அழைத்து வைத்து, போதனை செய்ததன் பலனிது.

நேச நாடுகளின் உதவியின்றி, ஜெர்மனியின் சிநேகத்தைப் பெற்றிருப்பதால் பிரயோஜனமில்லை என்பதைத் துருக்கி இப்பொழுது தான் தெரிந்து கொண்டாற் போலிருக்கிறது.

அப்புறம் என்ன நடக்கும் ?

துருக்கி ஜெர்மனியின் உறவை அறுத்துக் கொண்டால், அப்புறம் என்ன நடக்கும் என்று சொல்ல முடியாது. இரண்டு வருடங்களுக்கு முன்பானால், ஹிட்லர் துருக்கி மீது பாய்ந்திருப்பார் உடனே. இப்பொழுது அவர் துருக்கியுடன் போராட யோசிப்பார். ஆனால், அவர் துருக்கியைப் போருக்கிழுத்தாலும், இழுக்காவிட்டாலும், துருக்கியின் ஆதரவைப் பெறும் நேச நாடுகள் துருக்கியைத் தளமாகக் கொண்டு, பால்கன் பிரதேசங்களைத் தாக்கத் தொடங்கலாம். யுத்தத்தின் முடிவை இந்த நடவடிக்கைகள் துரிதப் படுத்தலாம்.

இப்படி எல்லாப் பக்கங்களிலிருந்தும் இடிகள் விழுவதையும், விழப் போவதையும் நினைக்கும் பொழுது, ஹிட்லருக்கும் கொப்பல்ஸ் துரைக்கும் அவரைப் போன்றவர்களுக்கும் ஆத்திரம் ஏற்படத்தானே செய்யும் ? அது செய்துவிடுவோம், இது பண்ணி விடுவோம் என்று அவர்கள் இந்த ஆத்திரத்தில் சொல்லுவதை யெல்லாம் பிதற்றல் என்று கொள்ளாமல் வேறென்ன வென்று கொள்ளுவது.

ஹிட்லருக்கு நிம்மதி !

இங்கிலாந்தின் மீது ஏக காலத்தில் பல இயந்திரங்களிலிருந்து, ஆளில்லா வெடி விமானங்களை ஏய்கிறார்களாம் நாஸிகள். அதனால், லண்டனில் கூட சேதம் அதிகமாம். ஆயினும், இந்தச் சேதங்களால், ஹிட்லருக்குச் சாதகம் எதும் ஏற்படப் போவதில்லை. சில தலைவர்கள் ஜோஸியம் சொல்லுகிறபடி இவ் வருட முடிவிற்குள் ஹிட்லருக்கு நிம்மதி ஏற்படலாம். ஒன்று நேச தேசத்தினர் கையில் அவர் கைதியாகச் சிக்க வேண்டும்; இல்லாவிட்டால் நமனுலகு சேர வேண்டும். அப்பொழுது தான் அவருக்கு நிம்மதி. அதற்கப்பால், எதற்கும் 'பிளான்' போடவேண்டியிராதல்லவா அவருக்கு ?

ஹிட்லரின் கதி

துள்ளின மாடு . . . .

(ஹிட்லர் கைதியானுர் என்னும் செய்தியைப் பத்திரிகையில் படித்தவுடன், ஒரு நிருபர் எழுதியது.)

திருக்குறளே வேதம் என்கின்றனர் பலர். அது வள்ளுவரின் வாக்குத் தான். வள்ளுவர் என்ன சொன்னுர்.... ?
" துனிக்கொப்பேறினுர் அ.·.திறந்தூக்கின் உயிர்க்கிறுதியாகி விடும்."

ஆம் ! மிகவும் உண்மையான செய்தி தான். இதோ அதை கண் கூடாக காண்கிறேம். அன்று இதே போல் தான் நெப்போலியன் வீரனுக விளங்கினுன். தன் வீட்டு நாய் அடுத்த வீட்டில் வால் விசிற முடியுமா ? அதே போல் ஹிட்லரின் தேச பக்தி தனது நாட்டை முன்னுக்கு கொண்டு வருவதி லேயே இருந்தால் பரவா யில்லே. அயல் நாடுகளில் இச்சை வைத்தால், அதோ கதி தான் !

அதே ஹிட்லர் !

1918-ம் வருஷம் ஜெர்மனி வீழ்ந்தது என்ற சத்தத்தை கேட்டு கண்ணீர் விட்டார் அடால்ப் ஹிட்லர். 17 வருஷம் கழித்து ஜெர்மன் சர்வாதிகாரி யானுர் அதே ஹிட்லர். 1942-ம் வருஷம் ஸ்டாலின்கிரேடு வரை சென்று ரஷ்யர்களே திணர அடித்தார் அந்த ஹிட்லர். அதே ஹிட்லர் தான் இன்று நாற் புறமும் சிங்க வீரர்களால் சுழப்பட்டு திணறுகிருர். அது போதாதா ? உள் நாட்டுப் புரட்சி வேறே ! எனய்யா ! சும்மா வாலே அடக்கிக் கொண்டிருந்தால் என் இந்த கதி ?

புரட்சி ! புரட்சி ! !

ஒரு நாட்டை பாழாக்குவது புரட்சி தான். நமது ஹிட்லரையும் ஜெர்மானிய சர்வாதிகாரியாக ஆக்கியதும் இந்தப் புரட்சி தான். ஆனுல் ஜெர்மனியில் இந்த ஜூலே மாதம் 20-ம் தேதி துடங்கியது இந்தப் புரட்சிதான். இந்தப் புரட்சி ஹிட்லருக்கு விரோதமாகவே செய்யப்பட்டது. பெர்லினில் ஒரு மகாநாடு நடந்தது. அதற்குச் சென்ருர் ஹிட்லர். வாயிற்படியில் கால் வைத்தார். " டுமீல் ". ஒரே ஒரு வேட்டு. இத்தனே நாள் அசையாத ஹிட்லரது நெஞ்சமும் அசைந்தது. நல்ல வேளே உயிர் தப்பினேம் என்ற எண்ணம் அவருக்குத் தோற்றியது. ஆனுல் தீக்காயங்கள் அவருக்குப் பட்டன.

பழைய எண்ணங்கள்

ஹிட்லரின் அகக் கண்ணில் ஒரே நிமிஷத்தில் பல படங்கள் தோன்றின. ஆமாம் ! " 1939-ம் வருஷம் ஒரு சமயம் மியூனிச்சில் ஒரு கூட்டத்தில் பேசி விட்டு திரும்பிய சமயமும் இதே மாதிரி தான் நடந்தது". இப்பொழுதும்—இந்த நெருக்கடியிலும்—ஜெர்மனி தோற்கப் போகும் இந்தச் சமயத்திலுமா நமக்கு இப்படி ஆபத்து வரவேண்டும்." என்ற எண்ணங்கள் ஹிட்லருக்கு பீதியை அளித்திருக்கும்—அளித்தது. சுற்றிப் பார்த்தார். தனது தோழர்களில் சிலர் மரித்துக் கிடந்தனர் என் ? ஜெர்மனியின் புரட்சியே இதற்கு காரணம் ?

எவ்வளவு நாள் சகிப்பது ?

ரஷ்யாவில் லக்ஷக் கணக்கான ஜெர்மன் வீரர்களே அழித்தார் ஹெர் ஹிட்லர். ஆனுல் ரஷயரின் கை ஓங்கி இருக்கிறது. ஆயினும் 'மூர்க்கனும் முதலேயும் கொண்டது விடா' என்பதற் கிணங்க, ஹிட்லர் மறுபடியும் ஒரு ஸ்டாலின்கிராடு போரை ஆரம்பிக்க எண்ணினுர். அதில் சுமார் $2\frac{1}{2}$ லக்ஷம் பேரை அனுப்ப எண்ணினுர். இப்படி $2\frac{1}{2}$ லக்ஷம் பேரை வீணுகக் கொல்ல எந்தக் கல் நெஞ்சருக்கும் மனம் வராதல்லவா? அது தான் ஜெர்மன் ஜெனரல் கர்னல் கிளாஸ்வான் ஸ்டாபபன் பர்க் என்பவர் ஹிட்லருக்கு விரோதமாகக் கிளம்பினுர். அவரைத் தொடர்ந்து அநேகரும் கிளம்பி விட்டனர். ஜெர்மனியில் புரட்சிக் கட்சி தலேவர் ஒருவர் " ஹிட்லர் மடியும் வரை போராடுவோம்" " ஹிட்லருக்கு எதிராக தமது படைகளே நடத்துவதே தளபதிகளின் கடமை." " ஹிட்லர் எதிர்ப்பு ஒழிந்தது" என சொல்வது பொய்" என பேடியோ நிலேயத்தில் ஒரு அருமையான பிரசாரம் செய்தார்.

ஹிட்லர் கதி என்ன ?

கிழக்கேயும் வடக்கேயும் ஸ்டாலின் விரட்டுகிருர். மேற்கே ஐஸன்ஹோவர் விரட்டுகிருர். தெற்கே என்னவென்ருல் நிலேநிற்க முடியாமல் வாபஸாகின்றனர் ஜெர்மனியர். இனி சுமார் 60 மைல் தான் இருக்கும் என்ற நிலேமையில் செஞ்சேனே இருக்கிறது. இதற் கிடையில் ஜெர்மனியில் பெரும் புரட்சி. வெளியே தலே காட்டக் கூட முடியாத நிலேமையில் ஹிட்லர் இருக்கிருர். அவர் கைது செய்யப்பட்டு விட்டார் என்ருல், அவரது நிலேமையை எப்படி வர்ணிப்பது. பாவம் ! யூதர்களேப் பழி வாங்கினுரே ! அதே ஹெர் ஹிட்லர் புரட்சிகாரரைப்பற்றி பேசுகையில் [தான் சதியினின்று தப்பின அன்று] "அறிவற்ற கொலே வெறி கொண்ட முட்டாள் அதிகாரிகள்" எனப் பேசினுர். பாவம் ! புத்தி கலங்கி விட்டது போல இருக்கிறது. ஹிட்லருக்கு, இல்லா விடில் தான் யூதர்களே கொலே வெறி கொண்டு கொன்ற செய்தி நினேவிற்கு வராமலா இருக்கும். கடைசியில் உலகமே எதிர் நோக்கும் ஹிட்லரின் கதி என்ன ?........37 வயதுடைய கர்னல் கிளாஸ்வான் ஸ்டார்பன்பெர்க் என்பவரால் கொலே செய்யப்பட இருந்து தப்பினுர். ஆனுல் அந்த பாழாப்போன புரட்சிக்காரர்கள் விட்டால் தானே ! அவர்கள் தான் ஹிட்லருடைய உயிருக்கே எமனுகத் தோன்றி அவரைக் கைது செய்து விட்டார்களே ! இனி என்ன செய்வது ?

காப்பது யார் வேலே ?

ஸீனர் முஸலோனி பிரிட்டிஷ்காரரிடம் அகப்பட்டுக் கைதியானுர். மானம் எல்லாம் போய் விட்டது. [மதராஸ் மிருகக் காட்சி சாலேக்கு கொண்டு வரப்படுவார் என கூட நினேத்தோம்] ஆனுல் ஹெர் ஹெட்லர் அவரது சகாக்களேக் கொண்டு அவரை மீட்டார். பேஷ் ! கெட்டிக்காரர் தான் ! ஆனுல்....இப்பொழுது கைதியாக்கப்பட்ட இந்த ஹிட்லரை யார் காப்பது ? புதிதாக ஜப்பானுக்கு முதன் மந்திரியாக வந்தாரே ஜெனரல் கோய்ஸோ அவரா ? அன்றி மறந்தும் மெய் சொல்லாத கோப்பல்ஸா ? மார்ஷல் கெஸல்ரிங்கா ? யார் வேலே.

புரட்சியாளர் யார் ?

இவ்வளவு நாள் ஹிட்லருடன் திட்டம் போட்டு, ஒரே மேஜையில் சாப்பிட்டுக் கூடி வாழ்ந்த அதே ஜெனரல்கள் இன்று புரட்சியின் தலேவர்களாகி யிருக்கிருர்கள். அப்படியானுல், அவர்களுக்கு அவர்மேல் எவ்வளவு ஆத்திரம் இருக்க வேண்டும் ! அவரது ஆட்சி எவ்வளவு கொடூரமா யிருக்க வேண்டும். இந்தப் புரட்சியினுல் ஹிட்லர் மனம் எவ்வளவு பாடுபட்டிருக்கும். [நாமானுல் ஒரு முழக் கயிறு தான் எடுப்போம்] அந்த கொடும் வீரன் என்ன செய்தார் ? ஜெனரல் பக், ஜெனரல் ஸ்டாபபன் இவர்களே வதைத்தார்—கொன்ருர். இன்னும் அநேகர் பாசறையில் ஒளிந்து இயக்கத்தை நடத்துகின்றனர். என்ன செய்து யாது பயன் ? ஹிட்லரது காலம் தான் குறுகி விட்டதே !

துள்ளின மாடு !

அப்பா ! என்ன வீரப் பிரசங்கம் !! என்ன சாதுரியப் பேச்சு !! ஸ்டாலின் கிராடை நோக்கி முன்னேறி என்ன ஓட்டம் !!! கோட்டை முதல் கொத்தளம் வரை " ஹிட்லர் " என்ற பெயர். அதெல்லாம் இப்பொழுது எங்கே ? நமக்கு அரிசி கூட சரியாகக் கிடைக்காதபடி தடுத்த ஹிட்லரின் வீர யுத்தம் எங்கே ? யூதரை வேட்டை யாடின ஹெர் ஹிட்லர் எங்கே ? ஆங்கிலேயரையும் ஜெயிப்போம் என்ற அடால்ப் ஹிட்லர் எங்கே ? பாவம் ! கைதி ராஜீயக் கைதி !! உலகத்தையே திகில் பிடிக்க வைத்த அந்த ஹிட்லர் பாவம் கைதி யானுர். " துள்ளின மாடு பொதி சுமக்கும்."

சிறு கதை

உண்மைத் தமிழ் மகள் தங்கம்

உயரிய வீரனுக்கு உகந்த மனைவி

தாமோதரனுக்கும் தங்கத்திற்கும் கலியாணம் ஆகி வருடம் ஒன்று தான். அவர்கள் தனிக் குடித்தனம் ஆரம்பித்து மாதங்கள் மூன்று ஓடி மறைந்தன. உத்தம மனைவியின் லக்ஷணங்கள் யாவும் தங்கத்தினிடம் மிளிர்ந்தன. ஆனால் அவளிடையே சற்று மாறுபாடும் தோன்றிற்று. அந்த மாறுபாட்டின் காரணம் தாமோதரனால் அறிய இயல வில்லை. எனினும், தங்கம் அதைக் குறிப்பாகக் காட்டி வந்தாள்.

அன்று கிளைவ் தன் பேனாவைத் தூக்கி எறிந்து விட்டு, ஆற்காட்டு யுத்தத்தை நடத்தியதை எடுத்துக் கூறினாள். சிவாஜியின் தீரத்தைச் செப்பினாள். வீமன் வெற்றியை வியப்புடன் மொழிந்தாள். அர்ச்சுனன் ஆண்மையையும் அறைந்தனள். ஆண் மக்கள் கைக்கு அணிகலம் வாள் என்பதையும் பல தரம் கூறினாள். தாமோதரனுக்கு இவை யாவும் தெரியாதவையல்ல. பண்டைத் தமிழ்ப் பெண்கள் தங்கள் கணவன் மார்களை போருக்கு அனுப்ப மஞ்சள் குங்குமம் இட்டு மங்களமாய் வழியனுப்புவது போல, தன்னையும் தன் மனைவி இன்று நடக்கும் போருக்கு இன்பமுடன் அனுப்புவா ளென்று எதிர் பார்த்துக் கொண்டு தானிருந்தான். தங்கமும் தன் கணவன் மனக் குறிப்பை அறிந்தாள். 1942-ம் ஆண்டு அக்டோபர் ஆறும் தேதி தன் கணவனுக்கு மஞ்சள் குங்குமமிட்டு போருக் கனுப்பினாள். தாமோதரன் அடுத்த ரெக்ரூட்டிங் ஆபீஸில் தன்னைப் பதிவு செய்து கொண்டான்.

சில மாதங்கள் ஓடி மறைந்தன. அநேகக் கடிதங்கள் தங்கத்தை நாடின. தங்கத்தின் பதில்கள் யாவும் தாமோதரனுக்குத் தைரியமும் வீரமு மூட்டின. சற்றும் கவலையின்றி போர் வேலையி லீடுபட்டான். படிப்படியாய் உத்தியோகமுமுயர்ந்தது. தனக்குக் கிடைத்த லீவில் ஊர் வந்தான். அநேக நூதனப் பொருட்களை வாங்கி வந்தான். அவை தங்கத்திற்கு ஒன்றும் பிடிக்க வில்லை. தங்கம் எதிர் பார்த்தது வேறு. ஆனால் கணவனிடம் சொல்ல வில்லை. தன் கணவன் முகத்தைப் பார்த்தாள். தாமோதரன் அதை உடன் அறிந்து கொண்டான். நான் லீவு முடிந்ததும் போர்க்களம் சென்று எதிரியின் கைவாளை இந்தப் பொம்மைக் கணிவிக்கத் தபால் பார்சல் மூலம் அனுப்புகிறேன் என்றான். லீவு முடிந்ததும் போர்க்களம் சென்றான். போர்க்களத்தில் நின்றான். தன் மனைவியின் எண்ணத்தை ஈடேற்ற எதிரியைக் கொன்றான். எதிரியின் கை வாளை எடுத்தான். பார்சலாய்க் கட்டினான். தபாலில் விடுத்தான்.

ஒரு நாள் வெள்ளி மாலை. தபால் தங்கத்திற்குக் கிடைத்தது. பார்சலைப் பிரித்தாள். வீர வாளை எடுத்தாள். பொம்மைக்கு அருகில் சொருகினாள். தன் தோழிகளை அழைத்தாள். தன் கணவனின் சாகசச் செயல்களைத் தன் தோழிகளுக் குரைத்தாள். தன் கணவனின் வீர தீரத்தை எண்ண எண்ண இன்பம் உயர்ந்தது. இதைக் கண்ட தோழிகள் தங்கள் கடமையை மறந்து விட்டோமே என்று ஏங்கினர். ஆனால் தங்கம் இன்னும் உங்கள் கடமைச் செய்ய சமயமிருக்கிறது என்றாள். உங்கள் கடமையைச் செய்ய நாளை நாளை யென்று ஒத்தி வைக்காதீர்கள். ஆண் மக்களுக்கு எவ்வளவு தைரிய மிருப்பினும், பெண்கள் தான் அதைத் தூண்டி விட வேண்டும். குடித்தனக் காரியங்கள் செய்ய எப்படி கணவனுக்கு உதவி செய்கிறோமோ, அது போலத் துரைத்தனக் காரியங்களுக்கும், தூண்டுதல் செய்ய வேண்டும். என்னால் என்ன முடியும் என்று ஒவ்வொருவரும் எண்ணினால், எப்படி நம் எதிரியை வீழ்த்துவது. ஆதலால் உங்களால் இயன்ற உதவியைச் செய்யுங்கள்! எனக் கூறித் தேற்றினாள். மறு நாள், அவளுடைய தோழியரின் கணவர்கள் பலர் படையில் சேர்ந்தார்கள்.

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

வைக்கும்படி சொன்னாராம். அந்த அம்மாளும் அந்தப்படியே தினந்தோறும் சாப்பிடும்போது கொண்டு வந்து வைப்பது வழக்கம். இப்படியாக அனேக வருஷ காலம் நடந்து வந்தது. அந்த அம்மாள் கடைசியாக இறக்கும் தருவாயில் திருவள்ளுவ நாயனர் அந்த அம்மாள் ஏதுவும் மனக்குறைகள் இருந்தால் தீர்த்துக் கொள்ளும்படி கேட்டாராம். அதற்கு, அந்த அம்மாள், எனக்கு யாதொரு மனக் குறையு மில்லை, ஆனால் நான் முதல் முதலாக அன்னம் பரிமாற வந்த போது ஊசியும் ஒரு பாத்திரத்தில் ஜலமும் வைக்கும்படி கட்டளை இட்டீர்கள். நானும் அதுவே போல் செய்து வந்தேன் அதை நீங்கள் ஒரு நாளும் உபயோகித்ததை நான் பார்த்ததில்லை. அவைகள் என்னத்திற்காக என்பதான சந்தேகம் என் மனத்தை விட்டு நீங்க வில்லை. அதை எனக்குச் சொல்ல வேண்டுமென்று கேட்டாளாம். அதற்கு திருவள்ளுவ நாயனர், நான் சாப்பிடும்போது ஏதாவது ஒரு அன்னம் கீழே தவறி விழுந்தால், அதை ஊசியால் குத்தி ஜலத்தில் சுத்தம் செய்து விட்டு மறுபடியும் ஆகாரத்துடன் சேர்த்துச் சாப்பிடுவதற்காக, என்று சொன்னாராம். இதிலிருந்து, நாம் ஒரு சிறு துளி அளவும் வீணாக்கக் கூடாது என்பது விளங்குகிறது.

பஞ்சத்தை தடுக்க வேண்டும்

இப்பொழுது ஐரோப்பாவிலும் பஸிபிக் மகா சமுத்திரத்திலும் மகா பெரிய யுத்தங்கள் நடந்து கொண்டு வருவது யாருக்கும் தெரிந்த விஷயமே. இந்தியாவிலும் எதிரிப் படைகள் உள் நுழையாதபடி நேசநாட்டுப் படைகளும் இந்தியப் படைகளும் போராடிக் கொண்டு வருகிறார்கள். இந்த நிலைமையில் இந்தியாவில் பஞ்சம் பீடிக்காமல் தடுப்பது ஒரு முக்கிய பிரச்னையாக ஆகும். ஏனெனில் நம் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டால் அது எதிரிகளுக்கு ஒரு ஆயுதமாகும். ஆகையால் அன்னிய நாடுகளிலிருந்து நமக்குத் தேவையான சாமான்கள் வர தடைபட்டிருக்கும் இந்த நெருக்கடியான நிலைமையில், நாம் நம்மிடமுள்ள உணவுப் பொருள்களையோ மற்ற சாமான்களையோ நிரவி இல்லாத இடங்களுக்கு அனுப்புவதுடன் நாமும் மிக சிக்கனமாகவே நமக்கு வேண்டிய சாமான்களை உபயோகப்படுத்த வேண்டும். நம்முடைய வீடுகளில் நடக்கும் நன்மை தீமைகளுக்கு ஆடம்பரச் செலவுகள் செய்யாமல், காரியங்களுக்கு ஆக வேண்டியதை மட்டும் செலவிட வேண்டும். நாம் சாப்பிடும் பொழுது இந்தியாவிலுள்ள ஒவ்வொருவரும் ஒரு கவாளம் குறைத்துச் சாப்பிட்டால் அந்தப்படி மீதப்படும் உணவானது, கோடிக் கணக்கான மக்கள் பட்டினி கிடந்து சாவதைத் தடுக்குமே யென்ற ஞாபகம் இருக்க வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் அரிசியை உலையில் போடும் பொழுது, ஒரு சரங்கை அரிசி அள்ளி வைத்து, அப்படிச் சேர்ந்த அரிசியை ஒன்று சேர்த்து, பஞ்சப் பிரதேசங்களுக்கு அனுப்பினால், லக்ஷக் கணக்கான ஜனங்களின் உயிர்களை காப்பாற்றுமே யென்பதான உணர்ச்சி இருக்க வேண்டும். நமது தேவைகளைச் சுருக்கினதின் காரணமாக, நம் தேச மக்கள் பஞ்சப் பிணியினின்று விடுவிக்கப்படில், அதுவே வெற்றிக்கு முக்கியமான அறிகுறியாகும்.

[திருச்சி அகில இந்திய வானொலி நிலையத்தினின்று சமீபத்தில் ஒலி பரப்பப்பட்ட தோர் பிரசங்கம்.]

இத்தாலியப் போர் முனையில்

பசிவாய்ப்பட்ட இத்தாலியருக்குத் தம் உணவை இந்தியப் படையினர் உதவுகின்றனர்.



தளவாடங்களும் சப்ளைகளும் குதிரைகள் மேல் ஏற்றி யனுப்பப் படுகின்றன.

நேசப் படைகள் மலைமீது முன்னேறிப் போகும் போது குதிரைகள் சப்ளைகளைச் சுமந்து கொண்டு போகின்றன.

ரோமன் சிறுவர்களோடு நேசப் படையினர் பழகுகின்றனர்.

காஸ்டிராவியெலோ பட்டணத்திற்குள் மாராட்டிப் படைகள் நுழைகின்றனர்.



செண்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் அமெரிக்க இராணுவ மோட்டார் டிரைவர் களோடு இந்தியப் படையினர் அளவளாவுகின்றனர்.

யுத்த நாட் குறிப்புக்கள்

பிரிட்டனும், ஜெர்மனியும்.

ஜூலை 26.—ஜெர்மனியிலுள்ள அனைவரையும் படையில் சேர்க்கும்படி நியமிக்கப் பட்டிருக்கும் ட்ரஸ்டியான டாக்டர் கொப்பல்ஸ் இன்று ஜெர்மன் மக்களுக்கு ஒரு பிரசங்கம் செய்தார்.

ஜூலை 29.—ஜெர்மானியர்கள் அனைவரும் படையில் சேரவேண்டுமென்று டாக்டர் கோப்பல்ஸ் முதல்முதலாக ஒரு கட்டளை பிறப்பித்தார்.

ஜூலை 31.—குண்டு விமானங்களைத் தனித் தனியாக இதுவரை இங்கிலாந்தின் தென் பகுதி மீது விட்டுக் கொண்டிருந்த ஜெர்மானியர், இப்போது கூட்டங் கூட்டமாக விடுகிறார்கள்.

அமெரிக்காவும் அட்லாண்டிக்கும்.

ஜூலை 30.—அமெரிக்கப் படைகளில் ஆயுதங்கள் கொண்டு போராடும் ஆண்களும் பெண்களும் 11,4 4,522 பேர்கள் இருக்கிறார்களென்று அமெரிக்க யுத்தக் கப்பற் படை இலாகா அறிக்கை யொன்று கூறுகிறது. 1939-ம் வருஷம் 375,296 பேர்கள் தான் இருந்தார்கள்.

இந்தியா, பர்மா, இலங்கை.

ஜூலை 27.—குடெய் குலேனையும் பால் பங்கையும் ஜப்பானியர்கள் விட்டுவிட்டு ஓடிப் போய்விட்டனர்.

லாஜாவை நேசப்படைகள் கைப்பற்றிக் கொண்டன.

ஜூலை 29.—பர்மாவின் எல்லைக்கு 7 மைல்களுக்கப்பால் தான் 14-வது படையிருந்தது. டிட்டிம் ரோடில் நம் படைகள் சூரசந்திரபூரைக் கடந்து விட்டன.

ஜூலை 30.—ஜாமுவுக்கு 8 மைல் தூரத்தில் நேசப் படைகள் இருக்கின்றன.

ஜூலை 31.—டிட்டிம் ரஸ்தாவில் சூரசந்த்ரபூரில் ஒரு இந்தியப் படை வேரூன்றிக்கொண்டது.

ரஷ்யாவும், பின்லாந்தும்.

ஜூலை 26.—நார்வா, டெம்ப்ளின், செரிச்சியா, குப்ரவா, புலவி, பார்ஸிடின், டிஸ்பினிக்கா, நட்வோர்னு, டிலேடின், முதலிய 400 இடங்களை சோவியத் படைகள் கைப்பற்றின.

ரஷ்யோ போலந்து உறவுபற்றி ஆலோசிக்கும் பொருட்டு போலந்து மந்திரி சபை கூடியது.

ஜூலை 27.— ல்வோவ், ஸ்டாலின் லவாவ், ட்வின்ஸ்க் ரெசிக்னி, பையரபிஸ்டாக், சியன்லியாய், ப்ருட்னிக் பங்கினேவோ, முதலிய 900 இடங்களை சோவியத் படைகள் கைப்பற்றின.

ப்ரெஸ்ட்-லிடாவ்ஸ்க்குள் ரஷ்யப் படைகள் நுழைந்தன.

சோவியத் அரசாங்கத்தோடு போலந்து தேசிய மீட்சிக் கமிட்டியார் ஒரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்கள்.

ஜூலை 28.—ஸ்பெரமிஸில், யரஸ்லோவ் என்னுமிடங்களை ரஷ்யப் படைகள் கைப்பற்றின. கொவ்னோவை ஜெர்மானியர்கள் காலி செய்தனர். ட்வின்ஸ்குக்கு வடக்கே 350 இடங்களையும் தெற்கே 60 இடங்களையும் சோவியத் படைகள் கைப்பற்றின.

போலந்து தேசிய மீட்சிக் கமிட்டியாரை மார்ஷல் ஸ்டாலின் சந்தித்துப் பேசினார்.

ஜூலை 29.—வார்ஸாவிற்கு 20 மைல்களுக்கருகில் சோவியத் படைகள் வந்துவிட்டன. 400 இடங்களுக்கு மேலாகக் கைப்பற்றப்பட்டன.

ஜூலை 30.—பால்டிக் நாடுகளிலிருந்து ஜெர்மானியர் ளை விரட்டியடிக்கும் முயற்சியில் 3 கடும் போர்கள் நடைபெற்றன

பியல்ஸ்கிஸ், ரைபோலி ஸ்ரெடின்ஸ்கையா, ரயிஸ்க், அகஸ்டவோ, ட்ராலியா, டோலினு, பிர்ஜாய் முதலிய 600 இடங்களை சோவியத் படைகள் கைப்பற்றின.

ஜூலை 31.—வார்ஸாவுக்கு 6 மைல் தூரத்தில் ரஷ்யப் படைகள் இருக்கின்றன. கோவ்னு, சிட்லிஸ், மின்ஸ்க்-மஸவெய்கி, லூகோ, மிட்டா முதலிய பட்டணங்களையும் ஊர்களையும் சோவியத் படைகள் கைப்பற்றின.

இத்தாலி, ஆப்பிரிக்கா மத்திய தரைக் கடல்.

ஜூலை 26.—இத்தாலிய அரசாங்க அந்நிய நாட்டுக் கொள்கையைக் குறித்து முதன் மந்திரி சைனர் பொனுமி ஒரு அறிக்கை விடுத்தார்.

மாட்சிமை தங்கிய 6-ம் ஜார்ஜ் மன்னர் படைகளைப் பார்வையிடும் பொருட்டு நேற்று இத்தாலிக்கு விஜயம் செய்தார்.

ஜூலை 27.—சரன் செப்லக்ரோ பிடிபடத்தக்க நிலையிலிருக்கிறது.

ஜூலை 28.—சான் காசியானோ, வல்லக்சியோ, கர்பியரனோ, சிபெர்னு ஆகிய இடங்களை நேசப் படைகள் கைப்பற்றின.

ஜூலை 29.—போலந்துப் படைகள் செனிகல்லியாவுக்குள் நுழைந்தன.

ஜூலை 30.—எம்போலியின் எல்லைப் புரத்திற்கு இந்தியப் படைகள் வந்து விட்டன.

வெள்ளிக்கிழமை, மாட்சிமை தங்கிய 6-வது ஜார்ஜ் மன்னர் இத்தாலியில் உணவு உண்டு முடித்த இடத்திற்கு 300 கஜ தூரத்திற்குள், இரண்டு ஜெர்மன் சுரங்க வெடிகள் வெடித்தன.

ஜூலை 31.—பிசா, எல்ஸா இவ்விரண்டிற்குள்ளும் இந்தியப் படைகள் புகுந்தன.

விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரி வயப்பட்ட நாடுகள்.

ஜூலை 26.—மான்ரபோட்டிற்குள் அமெரிக்கப் படைகள் நுழைந்துவிட்டன. மரிக்னி, செண்ட் கல்லிஸ் இவ்விரண்டும் அமெரிக்கர்கள் வசமாகிவிட்டன.

செவ்வாய்க்கிழமை ஜெனரல் ஐஸ்னோவர் நார்மண்டிக்கு விஜயம் செய்தார்.

நேற்றிரவு போலந்து பிரதம மந்திரி, மிஸ்டர் சர்ச்சிலைச் சந்தித்து ரஷ்ய-போலந்து உறவைக் குறித்து விவாதித்துக் கொண்டிருந்தார்.

ஜூலை 27.—லெஸ்ஸே, பெரியர்ஸ், லாமெஸ்னில் ஹெர்மன், காம்ப்ராண்ட், கானிசி ஆகியவற்றை நேசப் படைகள் கைப்பற்றின.

ஜூலை 28.—டெஸ்ஸி-சுர-வைர் என்னுமிடத்தை நேசப் படைகள் கைப்பற்றின. அமெரிக்கப் படைகள் செண்ட் டெனிஸ் லா காஸ்ப் என்னுமிடத்தைக் கைப்பற்றின.

ஜூலை 29.—கூடன்ஸென், செண்ட்ஜீன் டே பையசான்ட்ஸ் என்னுமிடங்களை நேசப் படைகள் கைப்பற்றின.

ஜூலை 30.—பெர்ஸி கைப்பற்றப்பட்டது.

பெர்ஸி, பெரிஹால், கவ்ரே ரொனிசா என்னுமிடங்களை நேசப் படைகள் கைப்பற்றின.

ஜூலை 31.—க்ரான்வில்லா, அவ்ராஞ்சஸ் ஆகியவற்றுள் நேசப் படைகள் புகுந்தன. செண்ட் ஜெர்மன்டி டி எக்டர், சாக்னே செண்ட் மீடின்டே டெசாசெஸ் ஆகியவற்றை நேசப் படைகள் கைப்பற்றின.

ருஷ்யாவுக்கும் ருமேனியாவுக்கும் நடைபெற்று வந்த சமரசப் பேச்சு முறிந்துவிட்டது.

நடு நிலைமை நாடுகள்.

ஜூலை 31.—சுவித்சர்லாந்துக்குள் ஆல்ப்ஸ் மலைக் கணவாய் வழியாக அன்னியர் யாரும் வரக்கூடாதென்று அந்நாட்டுப் படைத் தலைவர் அறிவித்திருக்கிறார்.

தூரக் கிழக்கு நாடுகள்.

ஜூலை 28.—24 ஜப்பானிய சப்ளைக் கப்பல்களை பிரிட்டிஷ் நீர்மூழ்கிக் கப்பல்கள் மூழ்கடித்துவிட்டன.

சாபாங் போராட்டத்தில் வெற்றி பெற்றதைப் பாராட்டி அட்மிரல் சர் ஜேம்ஸ் சோமர்வில்லாவுக்கு அட்மிரல் மௌண்ட்பேட்டன் ஒரு செய்தி யனுப்பியிருக்கிறார்.

ஜூலை 29.—மௌண்ட் டேஞ்சோ, அலுடான், சச்சா, ஆகிய இடங்களை குவாமில் அமெரிக்கப் படைகள் கைப்பற்றின. குவானுக்கு வடக்கேயுள்ள ஒரு விமானக் கூடத்தை அமெரிக்கக் கப்பற் படையினர் கைப்பற்றினர்.

ஜூலை 30.—குவாமிலுள்ள ஒரோட்டை அமெரிக்கப் படைகள் கைப்பற்றின.

ஜூலை 31.—அட்மிரல் சர் ஜேம்ஸ் எப். ரோமர்வில்லுக்குப் பதிலாக அட்மிரல் சர் ப்ரூஸ் ப்ரேசர் கிழக்குக் கப்பற் படையின் தலைவராக நியமிக்கப் பட்டிருக்கிறார்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.